விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 மார்கழி 16 ரபி - ஆகி 8 இதழ் 317
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 31-12-84

## இன்ஸ்பெக்டர் இருவரும் சுகமாயுள்ளனர்?
# தங்கத்துடன் மோ. சைக்கிளில் மதகுரு ஒருவர் வரவேண்டும்!
### கடத்தல்காரரின் நிபந்தனை

(கொழும்பு)
கடத்தப்பட்ட இரு பொலிஸ் இன்ஸ் பெக்டர்களும் இன்னமும் சுகமுடனிருப்பது பற்றி நம்பகமான தகவல் கிடைத்திருப்பதாக அரசு வட்டாரங்கள் அறிவித்த அதே நேரம் கடத்தல் காரர்களால் கடைசியாகக் கையளிக்கப்பட்டதாகக் கூறப்படும் நிபந்தனைக் கடிதம் பற்றிய விபரமும் வெளிவந்துள்ளது.

கடந்த 28ம் திகதி யாழ் அரச அதிபரின் வளவுக்குள் வீசப்பட்டுக்கிடந்ததாகக் கூறப்படும் அக்கடிதத்தில் பத்து நிபந்தனைகள் இடம் பெற்றிருந்ததாகத் தெரியவருகின்றது.

குறித்ததினம் (29ம் திகதி) பகல் 12மணிக்கும் 1மணிக்குமிடையில் யாழ்ப்பாணத்திலிருந்து கிறிஸ்தவ மதகுரு போல் உடையணிந்த ஒருவர் காங்கேசன்துறை வீதியில் ஹொண்டா ரக நீலநிறமோட்டார் சைக்கிளில் பயணம் செய்ய வேண்டும். 18 மைல் தூரத்தைக் கொண்ட யாழ் காங்கேசன்துறை வீதியில் ஓர் இடத்தில் நீலநிறக் கைக்குட்டையொன்று காட்டப்படும். அதைக்கண்டதும் அவர் பயணத்தை நிறுத்தி பணயத் தொகையான ரூ 50 லட்சம் பெறுமதியான இரு தங்கப் பாளங்களைக் கையளிக்கவேண்டும் இதையடுத்து மூன்று மணிநேரத்தின் பின் கடத்தப்பட்ட இரு பொலிஸ் இன்ஸ் பெக்டர்களும் விடுவிக்கப்படுவார்கள்.

இவ்வேளையில் குறித்தபகுதியில் ஆயுதப்படைகளின் நடமாட்டம் இருக்கலாகாதென்றும், ஹெலிகாப்டர். விமானம் வேவுபார்க்கலாகாதென்றும் கோரப்பட்டிருந்ததாம்.

கடிதத்தின் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டதா என்ற விபரம் அறிவிக்கப்படவில்லை.

# இலங்கை பிரச்னை: ரஜீவ் ஆராய்வார்!

## பத்திரிகையாளர் மாநாட்டில் வெளியிட்ட கருத்து

(புதுடில்லி)
**இலங்கை இனப்பிரச்னை பற்றி ஆராயப்போவதாக இந்திய பிரதம மந்திரி திரு. ரஜீவ்காந்தி தெரிவித்துள்ளார்.**

**பத்திரிகையாளர் மத்தியில் இக்கருத்தை வெளியிட்ட திரு. காந்தி கடந்த இருமாதங்களாக இப்பிரச்னை பற்றி ஆராய அவகாசம் கிடைக்கவில்லை என்றார்**

இந்தியப் பொதுத்தேர்தலில் அமோக வெற்றியீட்டியதின் பின் ஏராளமான உள்நாட்டு வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் கலந்துகொண்ட மகாநாட்டில் அவர் இக்கருத்தை வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

"இலங்கையின் இனப் பிரச்னை பற்றி ஆராயவுள்ளேன். கடந்த இரு மாதங்களாக இப்பிரச்னை குறித்து ஆராய அவகாசம் கிடைக்கவில்லை" என்று நேற்று நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில இந்தியப் பிரதம மந்திரி திரு. ரஜீவ்காந்தி கூறினர்.

இலங்கை இனப்பிரச்னையைத் தீர்த்துவைக்க இந்திய அரசு தொடர்ந்து முன் முயற்சி எடுத்துவரும் என்று முன்பு கூறியுள்ள திரு. காந்தி இப்பிரச்னையின் சகல அம்சங்களையும் விரிவாக ஆராயவும், ஏற்கனவே இந்திய அரசினுல் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வி கண்டுள்ளதன் காரணமாக புதிய முயற்சிகளை மேற்கொள்ளவும் விரும்புவதாக அவதானிகள் கருதுகின்றனர்.

"இந்தியாவைப் பலமுள்ள நாடாக கட்டியெழுப்புவேன். மக்களின் தேவைகளை நிறைவேற்றி வைக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபடவுள்ளேன், என்றுர் திரு. காந்தி.

"பாகிஸ்தான் உட்பட அயல் நாடுகளுடனும், உலக

(4ம் பக்கம் 3 கலம் பார்க்க)

## இந்தியத் தலைவர்களுக்கு மனைவிமார் தந்தி

[கொழும்பு]
கடத்திச் செல்லப்பட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர்களான தமது கணவன்மாரை விடுவிக்க உதவுமாறு இந்தியத்தலைவர்களுக்கு மேற்படி இன்ஸ்பெக்டர்களின் மனைவிமார் தந்தி மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பிரதமர் ரஜீவ்காந்தி, இந்தியஅரசின் வெளியுறவுக்குழுத் தலைவர் திரு ஜி பார்த்தசாரதி, தமிழக நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், தமிழ் நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு. சொக்கலிங்கம் ஆகியவர்களுக்கே இத்தந்திகள் அனுப்பப்பட்டுள்ளன.

## புதுவருடத்துக்கு முன் விடுதலையாவர்?
### மதத்தலைவர்கள் நம்பிக்கை

[கொழும்பு]
இம்மாதம் 21 ம் திகதியாழ். ரயில் நிலையத்தில் வைத்து கடத்திச் செல்லப்பட்ட இரு பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும் புதுவருடத்திற்கு முன்னர் விடுதலை செய்யப்படுவார்கள் என்று சர்வமதத் தலைவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இவ் இரு இன்ஸ்பெக்டர்களும் விரைவில் விடுதலை செய்

[8-ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

## இந்திய அமைச்சரவை இன்று பதவி ஏற்கும்?
### புது முகங்களுக்கு இடமளிக்கப்படலாம்

[புதுடில்லி]
இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி தலைமையிலான இந்தியாவின் புதிய அமைச்சரவை இன்று பதவியேற்கும் என்று பி ரி ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்திரா காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற குழுக் கூட்டம் ராஷ்டிரபதி புவனில் இன்று நடைபெறுமென்றும், இக்கூட்டத்தில் திரு. ரஜீவ் காந்தி இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவாரென்றும் இச்செய்தி கூறியது.

**அமைச்சரவையில் புதிய முகங்கள்**

இந்தியாவின் புதிய அமைச்சரவையில் இளவயதுடைய புதிய முகங்களுக்கு இடமளிக்கப்படலாமென்று அரசியல்

[8-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## விஜேவீர தமிழ் நாட்டில் இல்லை!

[கொழும்பு]
மக்கள் விடுதலை முன்னணி [ஜே வி பி] தலைவர் திரு. ரோகண விஜேவீர தமிழ் நாட்டில் இருக்கிறுர் என்பதை அக்கட்சியின் செயலாளர் உப்பதிஸ்ஸகமநாயக்க மறுத்துள்ளார்.

## தொண்டமான் வாழ்த்து

[கொழும்பு]
இந்திய பொதுத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய பிரதம மந்திரி திரு. ரஜீவ்காந்திக்கு கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு எஸ். தொண்டமான் வாழ்த்துச்செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

## கான்ஸ்டபிளும் தம்பியும் சுட்டுக் கொலை

(யாழ்ப்பாணம்)
யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் அவரது தம்பியும் பருத்தித்துறைப் பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது

சுப்பிரமணியம் என்ற பெயருடையவரான மேற்படி கான்ஸ்டபிள் அண்மையில்

(8ம் பக்கம் 5ம்கலம் பார்க்க)

# தீவிரவாதிகளுடன் தமிழ் பொலிசாருக்குத் தொடர்பு?
### இரகசியப் பொலிஸ் விசாரணை

[கொழும்பு]
பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் தமிழ் உத்தியோகத்தர்களுக்கு தீவிரவாதிகளுடன் தொடர்பு இருக்கின்றதா என்பது பற்றி இரகசியப் பொலிசார் ஆராய்ந்து வருகிறுர்களாம்.

தீவிரவாதிகளுக்கு எதிரான பொலிஸ் நடவடிக்கைகள் பற்றி முன்கூட்டியே முக்கிய தகவல் எட்டிவிடுகின்றது என்றும் சமீபத்தில் யாழ் ரயில் நிலையத்திலிருந்து கடத்தப்பட்ட இரு இன்ஸ்பெக்டர்களும் விடுமுறையில் செல்கிறுர்கள் என்ற தகவலும்கூட இவ்வாறு முன்கூட்டியே எவராலும் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்றும் இரகசியப் பொலிசார் கருதுகிறுர்களாம்.

அன்றைய தினம் கடமையில் இருந்த உத்தியோகத்தர்கள் ஏற்கனவே விசாரிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

இதேசமயம் விடுமுறை நாட்களில் பாடசாலை மாணவர்களுக்கு தீவிரவாதிகள் பயிற்சியளித்து வருவதாக பொலிசாருக்குத்தகவல் கிடைத்துள்ளதாம். கிழக்கு மாகாணத்தில் (ஈரோஸ்)

[8-ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## மன்னர், முல்லைத்தீவு, வவனியா அகதிகளுக்கு உதவ றோட்டறிக்கழகம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)
மன்னர், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவனியா பகுதிகளில் அகதிகளாக இருப்பவர்களுக்கு யாழ் றோட்டறி கழகத்தினர், பொது மக்களிடமிருந்து உதவி பெற்று வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உடுபுடவை,உணவுப் பொருட்கள், பாத்திரங்கள், மருந்து வகைகளை கீழ்க்காணும் இடங்களில் ஒப்படைக்குமாறு யாழ். றோட்டறிக் கழகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொழும்புத்துறை - சுண்டிக்குளி திரு. வி. பி. தேவராசா, 24 சோமசுந்தரம் ஒழுங்கை யாழ்ப்பாணம்.

குருநகர் யாழ்ப்பாணம்: திரு. எஸ். ஈ. மரியதாஸ், 98 வேம்படி வீதி யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம் [நகர பகுதி] திரு. வி. சிவானந்தம் [எம். பி. வீரவாகு சன்ஸ்] 15, பொன்னம்பலம் வீதி யாழ்ப்பாணம்.

காரைநகர்: திரு. எஸ், கே. கணேசன் [கொச்சிகடை] வாரிவளவு காரைநகர்.

உரும்பராய்: திரு. கே. பிர்

[8ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## சோவியத் திருப்தி

மாஸ்கோ, டிச.30
இந்தியப் பொதுத் தேர்தலில் இந்திரா காங்கிரஸின் வெற்றி குறித்து சோவியத் யூனியன் திருப்தி தெரிவித்துள்ளது.

இந்திரா காங்கிரஸின் வெற்றி அமெரிக்காவிற்குத் தோல்வியாகுமென்றும் சோவியத்யூனியன் தெரிவித்துள்ளது.

## முல்லைத்தீவு அகதிகளுக்கு ஜனதிபதி உதவுவார்

(யாழ்ப்பாணம்)
முல்லைத்தீவு மாவட்டத்தில் அகதிகளாக பள்ளிக்கூடங்களில் தங்கியுள்ள மக்களுக்கு உணவு, உடை, மருத்துவ வசதிகளை வழங்குவதற்கு உடனடியாக ஏற்பாடு செய்வதாக ஜனதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தன உறுதியளித்

(8ம்பக்கம் 5ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசி ஊளம்பரம்

## விற்பனைக்கு

கண்டி ரோட் அரியாலை யூதா கோவில் சிலை முன்பாக 2½ பரப்பு காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க 18, கச்சேரி நல்லூர் ரோட், யாழ்ப்பாணம். 1150

கிளிநொச்சி கனகபுரத்தில் இரண்டு ஏக்கர் காணி வீடு கட்டவும், மேட்டுப்பயிர் செய்யவும் உகந்தது. S. அந்தோனி, மிருக வைத்தியக் கந்தோர், கிளிநொச்சி. 1111

சிறந்த வியாபாரம் நடப்பதும் சகல பொருட்களும் துரித விற்பனை செய்யக்கூடியதுமான கடை குத்தகைக்கு கிடைக்கும். 92, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 1118

## விற்பனைக்கு

மட்டுவில் வடக்கு. கனகன் புளியடிக்கு அருகாமையில் சகல வசதிகளும் கொண்ட வடுப மூல பூ ரப்புகாணியும் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும் சி. சந்திரசேகரம் மட்டுவில் வடக்கு சாவகச்சேரி 1160

டாக்டர் ஒருவரின் சொந்தப் பாவப்பல இருந்த Renault R 4 கார் உடனடி விற்பனைக்கு உண்டு. 19, கோணமலை லேன். கொக்குவில் கிழக்கு கொக்குவில். 1143

மானிப்பாய் - தபால் கந்தோர் வீதியில் 1½ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. 95, பிரதான வீதி யாழ்ப்பாணம். 1137

## விற்பனைக்கு

தேயிலை வெற்றுப்பெட்டிகள் (Empty Boxes) விற்பனைக்குண்டு: 96, அம்பலவாணர் வீதி அத்தியடி, யாழ்ப்பாணம். 1166

## தேவை

குடும்பப் பொறுப்பு குறைவான முதிய வான் சாரதி தேவை தங்கியிருக்கக் கூடியவர் விரும்பப்படுவர். பிரவுண் சன் ரேட் சென்ரர், "கூட்டுறவுக் கட்டிடம்", கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1155

அச்வேலியில் உள்ள எவர்சில்வர் இன்டஸ்றீஸ் ஸ்தாபனத்திற்கு கீழ்க்காணும் அனுபவமுள்ள வேலையாட்கள் உடன் தேவை. ஒட்டுனர், (Welders) பொருத்துனர், (Fitters) ஸ்பின்னேஸ், (Spenners) Lathemen, Hot Dip Galuanizing உடன் விண்ணப்பிக்கவும். எவர்சில்வர் இன்டஸ்றீஸ், கைத்தொழில் பேட்டை, அச்சுவேலி, 1113

31 வயது நிரம்பிய கலிபோனியாவில் நிரந்தரமாக வேலை பார்க்கும் (B. Sc. Mediccl Technologint) வேளாள இந்து சமயத்தைச் சேர்ந்த மணமகனுக்கு 22- 23 வயதுடைய அதே இனசமயத்தைச் சேர்ந்த 5 அடி 4 அங்குலத்துக்குக் குறையாத G. C. E. A. L. சித்தியடைந்த அழகான மணமகள் தேவை. பிறந்தகுறிப்பும் புகைப்படத்துடனும் தொடர்புகொள்க. விளம்பர இல 1159 மே/பா. ஈழநாடு. 1159

## தவறிவிட்டது

G. T. O. கவாசாக்கி மோட்டார் சைக்கிளின் ஒருபக்க கவர் (மூடி) 28-12-84 அன்று கல்லுண்டாய் வீதியில் தவறிவிட்டது- கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ். K. K. S. வீதியிலுள்ள சிறிலங்கா புத்தகசாலையில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 1145

511461391 V இலக்கமுடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மு ஜெயபாலன், சிற்றிமெடிக்கல், யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும் 1138

வீ. புஸ்பாதேவி, சிவன் கோவில்ரோட், சாவகச்சேரி என்ற விலாசமிடப்பட்ட அடையாள அட்டை பேஸ் உடன் தவறிவிட்டது கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து மேற்படி விலாசத்தில் அல்லது சிற்றிமெடிக்கல் யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். 1139

## வாடகைக்கு

கொழும்பு கண் ஆஸ்பத்திரிக்கருகாமையில் சகல வசதிகளுடன் கூடிய வீட்டில் ஒரு பகுதி வாடகைக்கு உண்டு சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. விளம்பர இல. 1157 C/O. ஈழநாடு 1157

## காணவில்லை

S. S குறியிடப்பட்டுள்ள கலப்பின பசுவும் கன்றும் 22-12-84 தொடக்கம் காணவில்லை. காண்போர் கீழ்கண்ட விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். செ. சின்னத்துரை, 11, பிறவுண்ரோட், 5ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 1164

## MAYFAIR ACADEMY

ஜனவரிக்கான புதிய வகுப்புக்கள்: ஆரம்பமாகவுள்ளன Violin, Guitar, Veena, Miruthangam Dancing, Dress Making, knitting, Glass painting, FaPric Painting, cake icing, cookery, Spoken English மற்றும் பல வகுப்புகள் [illegible] வீதி, யாழ்ப்பாணம். 1165

## 10வது ஆண்டு நினைவஞ்சலி

செல்வி கமலாதேவி நவரத்தினம்



மலர்வு : 20-05-1952

உதிர்வு : 23-12-1974

உரும்பையூர்ப் பதிவாழ் உத்தமச் செல்வராம
நவரத்தினம் தம்பதியர்க்கு நற்றமிழ்ச் செல்வியாய்
ரேவதி நட்சத்திரத்திலேயே மண்ணுலகிற் பிறந்திறந்த
பாசமுள்ள எமதருமைக் கமலா தேவியே!
கல்வியிற் சிற்பியாய் கடைசிவரை சிறந்திருந்து
பெண்குலம் போற்றும் பெருமைசேர் உத்தமியாய்
குடும்பத்தாரனைவருடனும் பாசமுடன் வாழ்ந்த நும்மை
பற்றிட்ட நோயினுல் பாருலகை நீத்த நீர்
ஈசனடி சேர்ந்தின்று ஈரைந் தாண்டானாலும்
எம்மிதயத் தாரகையாய் எந்நாளும் ஒளிர்கின்றாய்.

உங்கள் நினைவால் வாடும்
குடும்பத்தவர் அனைவரும்

"சிவோகம்",
உரும்பராய் கிழக்கு. 1083

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

கீதா சுந்தரகுமார்

மலர்வு: 23-06-1954

உதிர்வு: 03-12-1984



அன்புடனும் பண்புடனும் அனைவருடன் பழகி, பிறர் துன்பம்கண்டுதுயர்களையும் இயல்புள்ளவராய் இன்னு செய்தார்க்கு இனியனசெய்யும் பண்பினராய், இவ்வுலகில் 30 ஆண்டுகள் வாழ்ந்த எங்கள் இல்லத்தின் ஒளி அகன்றுவிட்டது. நாங்கள் செவிமடுத்து மகிழ்ந்த இனியகுரல் ஒய்ந்துவிட்டது. எங்கள் உறவில் ஓரிடம் என்றுமே நிரப்பமுடியாத இடைவெளியாயிற்று.

எம்மையெல்லாம் ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டு மிகக் குறுகிய காலத்தில் மீளாத்துயில்கொண்ட எம் அன்பே உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

02-01-1985 (புதன்கிழமை) அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் நேரில் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

| | |
|---|---|
| கணவன்: | சுந்தரகுமார் |
| தந்தை, தாய், | சபாரத்தினம் |
| சகோதரங்கள்: | குடும்பத்தினர் |
| மாமன், மாமி: | பஞ்சலிங்கம் குடும்பத்தினர் (வல்வெட்டித்துறை) |
| மைத்துனர்: | CaPt. விஜயகுமார் குடும்பத்தினர் (வல்வெட்டித்துறை) Master Mariner (P.G) |

பெருந்தெரு,
புலோலி தெற்கு,
புலோலி. [illegible]

வருடமொன்றுக்கு உங்கள் மூலதனத்திற்கு
27% தொடக்கம் 30% வரை (வருட முடிவில்)
25% தொடக்கம் 28% வரை (மாதாந்தம்)
வட்டி பெற்றுக்கொள்ளுங்கள்
குறைந்த தொகை ரூபாய் ஆயிரம் (ரூபா 1000/-)
எந்நேரமும் அறிவித்தலின் பின் பணத்தை திருப்பி பெறலாம்.

விபரங்களுக்கு:

**JAFFNA PROPERTY TRADES Ltd.,**

3, நவீன சந்தை (மேல் மாடி)
யாழ்ப்பாணம் போன்: 23698

## ஓராண்டு நினைவஞ்சலி

இரா. புவனேந்திரன்



கோப்பாய் வடக்கு

மலர்வு : 30-4-54


உதிர்வு : 27-12-83

அன்பின் உருவமே, அழகிய தோற்றமே,
குழந்தை உள்ளமே,
கனிவின் நிறைவே, நீ மறைந்து ஓராண்டு
ஆகியும் உன் நினைவு எமக்கு என்றும் பசுமையே.
நல்லதையே பேசி, நல்லதையே செய்து,
நல்லர்கள் என்று நம்பியே வாழ்ந்த உனக்கு
இறைவன் கட்டாயம் சாந்தி அளிப்பார்.

அன்பான பெற்றோர், சகோதரிகள்,
மைத்துனர்கள், மருமக்கள்.

1146

## நினைவு கூர்கிறோம்



மாவிட்டபுரம்

திருநாவுக்கரசு சதானந்தன்

தோற்றம் - 18-5-50 மறைவு : 20-12-82

உன் வியர்வையில் தளிர்விட்ட எம் நிறுவனத்தில்
என்றும் நின் நினைவு வாழும்.

டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்

1162

## மரண அறிவித்தல்

மேஜர் சுப்ரமணியம்

சிறிலங்கா இராணுவம் (சிங்க ரெஜிமென்ற்) ஒய்வு பெற்ற நந்தாவில் கொக்குவிலைச் சேர்ந்த மேஜர் சுப்ரமணியம் 28-1 -84 வெள்ளிக்கிழமை FRANCEல் காலமானுர் இவர் காலஞ்சென்ற சின்னையா (ராமலிங்கம்). திருமதி மகேஸ்வரி சின்னையா (சிங்கப்பூர்) ஆகியோரின் அருமைப் புதல்வரும், தர்மவதியின் அன்புக் கணவரும், சுமதி, கோகுலன், ராகுலன், கௌதமி ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜேஸ்வரி, பரமேஸ்வரி, யோகேஸ்வரி, சத்தியமூர்த்தி (சிங்கப்பூர்) இவர்களின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற செல்லத்துரை, திருமதி நாகரத்தினம் செல்லத்துரையின் மருமகனும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம், உதயமூர்த்தி, சிவபாலகிருஷ்ணன் (OMAN, சிவராஜா- (LANKA CEMENT Ltd), ஆகியோரின் மைத்துனரும், யாழ். இராமகிருஷ்ணஸ், S. P. வேலாயுதபிள்ளையின் மருமகனும் ஆவார்.

ஈமக்கிரியைகள் விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

[1163)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திரா காங்கிரஸ் கட்சிக்குக் கிடைத்த அமோக வெற்றி!

## பல மாநிலங்களில் அனைத்தையும் கைப்பற்றியது

(புதுடில்லி)

இந்தியாவின் எட்டாவது பொதுத்தேர்தலில் அமோக வெற்றியீட்டியிருக்கும் இந்திரா காங்கிரஸ் கட்சி நேற்று நண்பகல்வரை வெளியான 499 முடிவுகளில் 392 தொகுதிகளை கைப்பற்றிக்கொண்டது.

பல மாநிலங்களில் இந்திரா காங்கிரஸ் கட்சி எல்லா தொகுதிகளையுமே கைப்பற்றிக்கொண்டது.

### ராஜஸ்தானில்....

ராஜஸ்தான் மாநிலத்தில் 25 தொகுதிகளும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு கிடைத்துள்ளது. வெளியுறவு இணை அமைச்சர் ராம் நிவாஸ்மிருதா அமைச்சர் பூட்டாசிங், சபாநாயகர் பல்ராம் ஜாக்கர், தூதுவர் நட்வட்சிங் ஆகியோர் இம்மாநிலத்தில் இந்திராகாங்கிரஸ் சார்பில் வெற்றிபெற்றனர்.

### ஹரியாணாவில்....

ஹரியாணா மாநிலத்தில் உள்ள 10 தொகுதிகளிலும் இக்கட்சி அமோக வெற்றி கண்டது. அமைச்சர் ராவ் வீரேந்திர சிங் இம்மாநிலத்தில் இருந்து தெரிவாகியுள்ளார் இம்மாநிலத்தில் கணிசமான செல்வாக்கைப்பெற்றிருந்த சரண்சிங் தலைமையிலான தலித் மல்தூர் கிஸான் கட்சி எந்தவொரு தொகுதியினையும் பெறவில்லை.

### மத்தியப்பிரதேசத்தில்...

மத்தியப் பிரதேசத்தில் 39 தொகுதிகளும் காங்கிரஸ் கட்சிக்கே கிடைத்தது இங்குள்ள 'போபால்' தொகுதியில் வாக்குப்பதிவு இடம்பெறவில்லை முன்னாள் திட்டமந்திரி சேத்தி, முன்னாள் அமைச்சர் வித்தியாபரன் சுக்ளா இம்மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சியில் வெற்றிபெற்றனர். 'குவாலியார்' தொகுதியில் பாரதீய ஜனதா கட்சித் தலைவர் திரு. அடல்பிஹாரி வாஜ்பாய் தோல்வி கண்டார்.

### உத்திரப்பிரதேசம்

உத்திரப் பிரதேசத்தில் 84 தொகுதிகளில் 82 தொகுதிகளை இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் 2 இடங்கள் தலித் மல்தூர்கிஸான் கட்சிக்கும் கிடைத்தது ஒரு தொகுதியில் வாக்குப்பதிவு இடம்பெறவில்லை. பிரதமர் ரஜீவ் காந்தி, இந்திரா காங்கிரஸ் செயலாளர் அருன்நேரு, நடிகர் அமிதாபட்சன் ஆகியோர் வெற்றி பெற்றனர். தலித் மல்தூர் கிஸான் கட்சித் தலைவர் சரண்சிங்கும் இங்குதான் வெற்றி பெற்றார் இங்கு ஜனதா தலைவர் சந்திரசேகர் தோல்வி கண்டார்.

### பீஹாரில்....

பீஹாரில் வெளியான 54 முடிவுகளில் 48 தொகுதிகள் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு கிடைத்தன. பல முக்கியமான அமைச்சர்கள் இங்கு வெற்றி பெற்றனர். ஜனநாயக காங்கிரஸ் தலைவர் திரு. ஜெகஜீவன்ராம் இங்கு வெற்றி கண்டுள்ளார்.

### ஹிமாசல் பீஹார்....

ஹிமாசலப் பிரதேசத்தில் மூன்று தொகுதிகளிலும் இந்திரா காங்கிரஸ் கட்சியே வெற்றி பெற்றுள்ளது. ஒரு தொகுதியில் வாக்குப்பதிவு இடம்பெறவில்லை. குஜராத்திலுள்ள 26 தொகுதிகளில் 23 தொகுதிகளும், ஒரிஸாவிலுள்ள 21 தொகுதிகளில் 20 தொகுதிகள் இக்கட்சிக்கே கிடைத்துள்ளது கேரள மாநிலத்தில் 20 தொகுதிகளில் இந்திரா காங்கிரஸ் கூட்டணி, 17 இடங்களையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கூட்டணி மூன்று இடங்களையும் பெற்றனர் முன்னாள் தூதுவர் நாராயண் இம்மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் சார்பில் வெற்றி பெற்றுள்ளார் கர்நாடகத்தில் 28 தொகுதிகளில் 24 காங்கிரஸ் கட்சிக்கும் 4 தொகுதிகள் ஜனதாக் கட்சிக்கும் கிடைத்தன.

அமைச்சர் சங்கர் ஆனந்த, வீரேந்திர பாட்டீல், ஜனார்த்தனன் பூஜாரி வெற்றிபெற்ற அமைச்சர்கள் ஆவர். அமைச்சர் எஸ் என் கிருஷ்ணா தோல்வி கண்டுள்ளார். ஜனதா தலைவர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் இங்கு தோல்விகண்டுள்ளார்.

மகாராஸ்டிர மாநிலத்தில் 48 தொகுதிகளில் 43 தொகுதிகளில் காங்கிரஸ் வென்றுள்ளது பதுகாப்பமைச்சர் சவாண் இங்கு வெற்றி பெற்றுள்ளார் முன்னாள் முதலமைச்சர் அந்துலே புதிய கட்சியில் போட்டியிட்டுத் தோல்வி கண்டுள்ளார். காங்கிரஸ் (எஸ்) தலைவர் சரத் பாவார் ஜனதா சார்பில் மதுதாண்டவதே ஆகியோர் இங்கு வெற்றிபெற்றனர். அமைச்சர் நரசிம்மராவ் இங்கு வெற்றி பெற்றார்

டெல்லி யூனியன் பிரதேசத்தில் 7 தொகுதிகளும் இந்திரா காங்கிரசுக்கே கிடைத்தது. பாண்டிச்சேரி. மீசோரம், இலட்சத் தீவுகள், சண்டிகார், அந்தமான் நிக்கோபர் தீவுகள் ஆகியவற்றிலும் இந்திரா காங்கிரஸ் வெற்றிகண்டுள்டுள்ளது. தமிழ்நாட்டிலும் இக்கட்சி பெருவெற்றி கண்டுள்ளது. (சூ)

## 25 சதத்துக்கு 250 ரூபா

(கொழும்புதுறை)

சவர்க்காரம் ஒன்றை 25 சதம் விலை கூட்டி விற்ற யாழ் வர்த்தகரொருவர் விலைக்கட்டுப்பாட்டதிகாரிகளிடம் சிக்கிக் கொண்டார், யாழ் விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்கள அதிகாரிகளைக் கொண்ட குழு மேற் கொண்ட திடீர் சோதனையின் போதே இவ் வர்த்தகர் பிடிபட்டார்.

இதனைத் தொடர்ந்து பிரஸ்தாப வர்த்தகருக்கு எதிராக யாழ். விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்தால் யாழ். நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழககில் யாழ். நீதவான் திரு. எஸ். நாகராசா வர்த்தகருக்கு 250 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

## பருத்தித்துறை அகதிகளை சொந்த இடங்களுக்கு அனுப்ப அமைச்சர் 'இராசு' கோரிக்கை

(கொழும்பு)

பருத்தித்துறை சைவப்பிரகாச வித்தியாசாலையில் அகதிகளாகவுள்ள 72 குடும்பங்களை சொந்த இடங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு தேசியபந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலியை நேற்று சந்தித்த பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு செ. இராசதுரை கேட்டுள்ளார்.

வுமுல்லைத்தீவில் அகதிகளாகள்ள சுமார் 5000 பேரை அவர்களின் பழைய இடங்களுக்கு அனுப்ப ஏற்பாடுசெய்யுமாறும வவனியாவில் சொந்த இடங்களை விட்டு வெளியேறியுள்ளவர்களுக்கு நிவாரணம் அளிக்குமாறும் அமைச்சர் இராசதுரை கேட்டுள்ளார்.

'பூசா' முகாமில் உள்ளவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (க)

## ரியூட்டறிகள் 'தூக்கம்'

( ரவெட்டி)

வடமராட்சிப் பகுதியிலுள்ள ரியூட்டறிகள் இப் பொழுது மூடிக்கிடக்கின்றன.

நெல்லியடி, கரவெட்டி, பருத்தித்துறை, புலோலி ஆகிய பகுதிகளில் உள்ள ரியூட்டறிகளுக்கே இந்தக்கதி ஏற்பட்டுள்ளது.

விசேடவகுப்புகள், மீட்டல் வகுப்புகள், துரித மீட்டல் வகுப்புகள், பல்தேர்வு வினா விடை வகுப்புகள் என நடத்தி வந்த ரியூட்டறிகள் இப்போது தூங்கிக்கிடக்கின்றன

## அமைதியாக நடந்தது

(மாவிட்டபுரம்)

வசாவிளான் ஒட்டகப்புலம் அமலோற்பவ மாதா கோயில் வருடாந்த திருநாள் நாட்டு நிலைமையை கருத்தில் கொண்டு அமைதியான முறையில் கொண்டாடப்பட்டது.

பங்குத்தந்தை வண. எம். ரி பற்றிக் அடிகள் பங்கு மக்களின் ஒத்துழைப்புடன் இந்த உற்சவத்தை சிறப்பாக நடத்தினர். வண. பீற்றர் ஜெயசிங்கம் அடிகள் உற்சவத்தில் உரை நிகழ்த்தினார்.

# நான்கு மாநிலங்களில் எதிர்க்கட்சிகள் வெற்றி!

(புதுடில்லி)

ஆந்திரா, மேற்கு வங்காளம், திரிபுரா, காஷ்மீர் ஆகிய மாநிலங்களில் எதிர்கட்சிகள் அமோக வெற்றி கண்டுள்ளன.

42 தொகுதிகளைக் கொண்ட ஆந்திரா மாநிலத்தில் தேர்தல் இடம்பெற்ற 40 தொகுதிகளில் முதலமைச்சர் என். டி. ராமராவ் தலைமையிலான தெலுங்கு தேசம் 28 தொகுதிகளையும் இதன் தோழமைக்கட்சிகள் 5 தொகுதிகளையும் பெற்றன. இந்திரா காங்கிரஸ் 6 இடங்களை மட்டுமே பெற்றது.

மத்திய அமைச்சர் பி. வி. நரசிம்மராவ், சிவசங்கர் விஜய பாஸ்கர் ரெட்டி, வெங்கடசுப்பையா, கரிணுத்மிஸ்ரா, டாக்டர் சந்சீராவ், முன்னாள் அமைச்சர் பிரமானந்ரெட்டி, ஆகியோர் இந்திரா காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டுத் தோல்வி கண்டனர்.

இடதுசாரிகளின் கோட்டையாக விளங்கிய மேற்குவங்காளம் தொடர்ந்தும் அவர்களின் கையிலேயே வந்துள்ளது. ஆயினும் காங்கிரஸ்கட்சியும் இங்கு பெரும்பாலான இடங்களைப் பெற்றுள்ளது. 42 தொகுதிகளில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ் கட்சி 18 இடங்களையும் அதன் தோழமைக் கட்சியான இந்தியக் கம்யூனிஸ்கட்சி மூன்று இடங்களையும் ஆர். எஸ். பி 3 இடங்களையும், பார்வார்ட் பிளாக் 2 இடங்களையும் பெற்றன. இ. காங்கிரஸ் 16 தொகுதிகளைப் பெற்றது. சென்ற தேர்தலில் இக்கட்சி 4 இடங்களைப்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. அமைச்சர் ஹனிகான் சௌத்திரி வெற்றிபெற்றுள்ளார். இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்த 3 முக்கியர் தலைவகள் இம்மாநிலத்தில் தோல்வி கண்டுள்ளனர்.

திரிபுராமாநிலத்தில்இரண்டு தொகுதிகளும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கே கிடைத்தது

காஷ்மீர் மாநிலத்தில் காஷ்மீர் பள்ளத்தாக்கிலுள்ள 3 தொகுதிகளையும் ஜனுப் பரூக் அப்துல்லா தலைமையிலான தேசிய மாநாட்டுக் சட்சியே வென்றுள்ளது. காஷ்மீர் சிங்கம் ஷேக் அப்துல்லாவின் மனைவி 'அருந்நார்' தொகுதியில் அமோக வெற்றி பெற்றுள்ளார், ஸ்ரீநகர், வாரமூல்லே ஆகிய தொகுதிகளிலும் தேசிய மாநாட்டுக் கட்சியினர் வென்றுள்ளனர்.

ஜம்மு தொகுதியில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் முன்னணியில் நிற்கிறார் (சூ)

## சீர்திருத்த மத்திய குழு

(கோப்பாய்)

ஆவரங்கால் கிராமத்தில் சமூக சீர்திருத்தத்தை மேற்கொண்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்து வதற்கும், பிள்ளைகளின் கல்வி தரத்தை வளர்பதற்கும் நான்கு பொதுஸ் தாபனங்கள் சேர்ந்து ''மத்திய குழு'' ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

ஆவரங்கால் இந்து இளைஞர் மன்றம், கிராம அபிவிருத்திக் கழகம், விவேகானந்தா சன சமூக நிலையம், விளையாட்டுக் கழகம் ஆகியன கூட்டாகி சேர்ந்து மத்திய குழுவைத் தெரிவு செய்துள்ளது.

தலைவர்:-திரு எஸ். தேவதா

[6-ம் பக்கம் 5ம்கலம் பார்க்]

# வியாபார பிரகடனம் பற்றி உதவி ஆணையாளர் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

சகல வர்த்தகர்களும் தங்களுடைய களஞ்சியம் உள்ள இருப்பிடங்களை பிரகடனம் செய்யவேண்டும். இது ஒரு வியாபாரப் பிரகடனமாகும் தங்கள் கடை, வியாபாரம் நடத்தும் கட்டிடத்துடன் இணையாது வேறு ஒரு விலாசத்தில் களஞ்சிய அறை இருந்தால் வியாபாரச்சட்டத்தின் கீழ் பிரகடனம் செய்ய வேண்டும்.

யாழ். கிளிநொச்சி மாவட்டங்களின் உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளர் திரு த. மார்க்கண்டு வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது; உத்தரவு பெற்ற கடைக்காரர் அரிசி, மா, சீனி, பால்மா போன்றவற்றைத் தனியார் வியாபாரிகளுக்கு மொத்தமாக விற்பதாகத் தகவல் கிடைத்துள்ளது, எனவே உத்தரவு பெற்ற வியாபாரியிடம் பொருள்கள் பெறுவோர் இனி அண்மையில் உள்ள ப. நோ. கூ. சங்கக்கிளைகளில் பொருட்களைப் பெற ஒழுங்குகள் மேற்கொள்ளப் படும்.

''உணவுப்பொருட்கள்பெறுவதில் கஷ்டம், தடை தாமதம் இருந்தால், உடனடியாக உதவி அரசாங்க அதிபர் ப. நோ. கூட்டுறவுச் சங்கத் தலைவர், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோடன் தொடர்பு கொள்ளுங்கள். போதிய உணவுப்பொருட்களை உணவு இலாகா கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம்மூலம் வழங்கிவருகின்றன

இப்போது தேவைப்படுவது கிடைப்பதை, இருப்பதை, வருவதை நியாயமானமுறையில், எல்லோரும் பெற்றுஉண்டு வாழ உதவுவதாகும். மோசடிகளை கண்டுபிடிக்க எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும். பதுக்கல் பற்றி தகவல் தருவோருக்கு சன்மானம் வழங்கப் படும். (க)

## ஆசிரியர் பதவி நேர்முகப்பரீட்சை: முல்லைதீவில் நடத்துமாறு அரச அதிபர் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

கொழும்பில் நடைபெற்ற உதவி ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக்கு முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து செல்லாதவர்களுக்கு, முல்லைத்தீவிலேயே நேர்முகப் பரீட்சையை நடாத்த ஏற்பாடு செய்யுமாறு கல்விச் சேவை ஆணைக்குழுவிடம் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரன் கோரியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்து அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளதால் கொழும்புசெல்ல முடியாத நிலை ஏற்பட்டதாகவும், அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (க)

## நீடிப்பு

(புலோலி)

வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஊழியர் நலன் புரிச் சங்கத்தினுல் இளைஞர், யுவதிகளின் நன்மை கருதி நடாத்தப்படவுள்ள இலவச தமிழ் ஆங்கில சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக நலன் புரிச்சங்கத்திட்ட அமைப்பாளரும் பயிற்சிப் போதனாசிரியருமான திரு வ சிவச்சந்திரதேவன் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். குடாநாட்டிலிருந்து வெளியேற உதவி அரச அதிபர் அனுமதி அவ்சியம்

## விரைவில் சோதனை கடுமையாகும்

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு வலயமான யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து வெளியேறும் ஒவ்வொருவரும் தத்தம் உதவி அரசாங்க அதிபர்களிடம் அனுமதி பெற்ற பின்னரே வெளியேற அனுமதிக்கப்படுகின்றனர்.

வெளியிடங்களிலிருந்து யாழ் குடாநாட்டினுள் வருவோரும் தத்தமது உதவி அரசாங்க அதிபரிடம் அனுமதி பெற்ற கடிதங்களுடனேயே அனுமதிக்கப்படுகின்றனர்.

தற்போது ரயில் மூலம் வருவோர் அல்லது வெளியேறுவோரிடம் மட்டுமே இந்தஅனுமதிப்பத்திரங்கள் இருக்கின்றனவா என்று சோதனையிடப்படுகின்ற போதிலும் விரைவில் ஆனையிறவில் வைத்தும் இவை பரிசீலிக்கப்படும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### எது பாதுகாப்பு வலயம்

யாழ்ப்பாண மாவட்டத்தின் முழுப்பகுதியும், கிளிநொச்சி மாவட்டத்தின் பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவும் பாதுகாப்பு வலயத்தினுள் அடங்குகின்றன. அதாவது, யாழ். குடாநாடு முழுவதும் பாதுகாப்புவலயமாகும்.

பாதுகாப்பு வலயத்தில் நிரந்தரமாகக் குடியிருக்குமொருவர் வெளிமாவட்டம் ஒன்றுக்கு செல்வதற்கு தமதுஉதவி அரச அதிபரிடம் விண்ணப்பிக்க வேண்டும். அங்கே 'ஏ' படிவம் ஒன்று வழங்கப்படும் அதில் விண்ணப்பதாரியின் பெயர் அடையாள அட்டை இலக்கம் வெளியேறும் திகதி நிரந்தர முகவரி, வெளிமாவட்டத்தில் தங்க உள்ள முகவரி என்பவற்றை தெரிவிக்கவேண்டும். அந்தப்படிவத்தை பின்னர் உதவி அரச அதிபர் கையொப்பமிட்டு வாங்குவார் அதனை அவர் மாவட்டத்திலிருந்து வெளியேறும் போது தம்முடன் கொண்டு செல்ல வேண்டும்.

இந்த 'ஏ' படிவத்தில் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் யாவும் உடனடியாக மாவட்ட இணைப்பு அதிகாரிக்கும் விண்ணப்பதாரி தங்கவிருக்கும் இடத்திலுள்ள பொலிஸ் நிலையத்துக்கும் அறிவிக்கப்படும் என்று உதவி அரசாங்க அதிபர் ஒருவர் தெரிவித்தார்.

இதேபோலவேவெளிமாவட்டம் ஒன்றிலிருந்து பாதுகாப்பு வலயத்தினுள் பிரவேசிக்கும் ஒவ்வொருவரும் தத்தம்உதவி அரச அதிரிடம் அனுமதி பெறவேண்டும்.

## இடமாற்றம்

(சாவச்சேரி)

சாவகச்சேரி மக்கள் வங்கியில் கடந்த ஐந்து வருடங்களாக சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளராகப் பணியாற்றிய திருமதி வீரகுலசிங்கம், 14ம் திகதி முதல் குருநகர் மக்கள் வங்கிக் கிளைக்கு இடமாற்றம் செய்யபட்டுள்ளார். (கி)

## ஆசிரியர் மாத வேதனம் புதிய முறை

## இ. த. ஆசிரியர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''யாழ்மாவட்ட சகல ஆசிரியர்களையும் அவர்களின் மாத வேதனத்தைப் பெறுவதற்காக அதிபருடன் குருநகர் முகாமிலுள்ள இலங்கைவங்கிக் கிளைக்குவருமாறு அழைக்கும் முறையை இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது இத்தீர்மானத்திற்கு வழிவகுத்த யாழ் மாவட்ட கல்விப்பணிப்பாளர், கணக்காளர் ஆகியோர் இத்திட்டத்தை ஆசிரிய சங்கப்பிரதிநிதிகளுடன் கலந்தாலோசிக்கவில்லை இப்புதுமுறை'' இறுதி நேரத்தில் மாத்திரம் வெளியிடப்பட்டுளது'' என்று இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கம்வெளியிட்ட அறிக்கையில் கண்டித்துள்ளது

இது தொடர்பாக கல்வி அமைச்சுடனும் யாழ். கல்விப்பணிமனையுடனும் தொடர்கொண்ட சங்கத்தின் பொதுச் செயலாளர் த மகாசிவம் இப்பிரச்னையைத் தீர்க்க இரு வேண்டுகோள்களை விடுத்துள்ளார்.

குருநகர் முகாமுக்குச் செல்ல முடியாத ஆசிரியர்களின் சம்பளம் உடனடியாக அவர்களின் வீட்டுமுகவரிக்குத் தனித்தனி காசோலையாக அனுப்பப்படுதல் வேண்டும்

''அடுத்தமாதம் முதல் இம்முறை முற்ருகவாபஸ் பெறப்பட்டு ஆசிரியர்களுக்கு எவ்விதத்திலும் சிக்கல்இல்லாத ஒரு முறையை கல்விப்பணிப்பாளர் இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்துடன் கலந்தாலோசித்து நடைமுறைப்படுத்தவேண்டும்''

இவ்விடயம் தொடர்பாச கல்விப்பணிமனை கல்வியமைச்சின் ஆலோசனையையோ அல்லது அங்கீகாரத்தையோ பெறவில்லையென்றும் பொதுச் செயலாளர் தெரிவித்தார்

## "நாம்வ…

## அராஜக…

### வணராகு…

[யாழ்ப்பாணம்]

''நாம் வன்முறையா… அல்லர். அராஜகவாதிக… அல்லர். நாம் அடிமைகள… வாழ விரும்பவில்லை; சு… திரமாக - நிம்மதியாக, ச… தானமாக வாழ விரு… கிருேம்.'' என்று தமி… விடுதலைப் புலிகள் இயக்… தின் ''விடுதலைப் புலிக… என்ற டிசம்பர் மாதப்… திரிகையில் தெரிவிக்கப்… டுள்ளது.

வண. ராகுல தேரோவு… ஒரு கடிதம் என்று த… பிட்டு அப்பத்திரிகை எ… யுள்ள ஆசிரியத் தலையங்… திலேயே மேற்கண்டவா… கூறப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்… பட்டிருப்பதாவது:-

தர்மம் பற்றி நாம் உ… ளுக்குப் போதிக்கத்தே… யில்லை. புலமைபெற்ற பி… என்ற வகையில் உங்களு… பௌத்த தர்மம் என்பது … யாததல்ல. பிரபஞ்ச ஒ… கமைதிக்கும், மனித உற… களின் ஒத்திசைவுக்கும் … மானது தர்மம்என்று நீங்… வழிபடும் அந்த மெஞ்ஞா…

## கிளிநொச்சிவரை ரயில் சேவை

(யாழ்ப்பாணம்)

'யாழ்தேவி' இன்ரசிற்றி ரயில் சேவைகள் மறு அறிவித்தல்வரை கிளிநொச்சி வரையே நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம்வரை, ரயில் பிரயாணிகளுக்காக விசேட பஸசேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## இலங்கை...

(1ம்பக்க 3ம் கலத்தொடர்ச்சி)

நாடுகளுடனும் நட்புறவை வளர்த்துக்கொள்வேன், இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றமில்லை. அணிசேரா இயக்கக் கொள்கைகளைத் தொடர்ந்தும் எமது நாடு கடைப்பிடித்துவரும்'' என்று அவர் மேலும் சொன்னுர்.

## கோரிக்கை

[சாவகச்சேரி]

கைதடியில் கைது செய்யப்பட்டு தற்போழுது பூசா முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களான வி. பாஸ்கரன், சிவானந்தன் ஆகியோரை விடுதலை செய்யுமாறு திரு எம் எஸ். செல்லச்சாமி தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு அத்துலத் முதலியை கேட்டுள்ளார்.

இரு இளைஞர் கைதடி அகதிகள்கள் முகாமில் தொண்டர்களாக கடமையாற்றியவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது (க)

## பின்போடப்பட்டுள்ளன

(வண்ணர்பண்ணை)

நாட்டில் நிலவும் பதற்ற நிலைகாரணமாக யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை டிசம்பர் மாதம்வரை திட்டமிட்டிருந்த செயற்பாட்டு நடவடிக்கைகளை காலவரையின்றி பின்போட்டுள்ளது.

இளைஞர்களின் பாதுகாப்பு கருதியும், போக்குவரத்து வசதியீனங்கள் கருதியும் பேரவை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

தவிர்க்க முடியாத சில சமய நிகழ்ச்சிகளை அவ்வப் பகுதி இளைஞர் மன்றங்கள் மூலம் பகுதி பகுதியாக செயல்படுத்தவும் பேரவை ஏற்பாடுகள் செய்துள்ளது. இது தொடர்பான அறிக்கை ஒன்றையும் பேரவை மன்றங்களுக்கு அனுப்பியுள்ளது (கி)

## வீடுகள் தீக்கிரை! அகதிகளாக 250 பேர்!

(கிளிநொச்சி)

வவனியா பெரியகட்டுப் பகுதியில் உள்ள 42 வீடுகளை சீருடையில் வந்தவர்கள் தீயிட்டுக்கொளுத்தியுள்ளனர்

இதனுல் இந்த 42 குடும்பங்களைச்சேர்ந்த 250 பேர் அகதிகளாக வவனியாவிலிருந்து கிளிநொச்சிவந்து சேர்ந்துள்ளனர்.

இந்த அகதிகள் தற்போது கிளிநொச்சி கனிஷ்டமகாவித்தியாலயத்தில் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவர்களை வன்னேரிக்குளத்தில் குடியேற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவர்களை குடியேற்றுவதற்கான ஏற்பாடுகளை பரந்தன் வை. எம் சி ஏ மேற்கொண்டுவருகிறது

## மண்ணெண்ணெய் தட்டுப்பாடு விவசாயிகள் கலக்கம்!

[மாவிட்டபுரம்]

வட பகுதியில் மண்ணெண்ணெய்க்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுவதால் விவசாயிகள் தாம் ஆரம்பித்துள்ள விவசாயச் செய்கையைக் கைவிடுவதா? அல்லது தொடர்ந்து மேற்கொள்வதா? எனக் கலக்கம் அடைந்துள்ளனர்.

விவசாயிகள் அண்மையில் பெய்த மழையையடுத்துத் தமது விவசாய நிலங்களைப் பண்படுத்திப் பயிர்க் கன்றுகளை நாட்டி வருகின்றனர்.

இந்நிலையில் தமது விவசாயச் செய்கையைத் தொடர்ந்து மேற்கொள்ள மண்ணெண்ணெய் கிடைக்குமா என்ற சந்தேகம் விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது. விவசாயிகள் மண்ணெண்ணெய்க்காக அலைந்து திரியவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இத்துடன் மின்சார வசதியற்றவர்கள் வீட்டுப்பாவனைக்கென மண்ணெண்ணெயை வாங்கமுடியாமல் அலைந்து திரிவதையும் காணமுடிகிறது (கி)

# தாய்மொழியில்சட்ட இலக்கியச் செல்வங்களைத் தரமான நூலாக்கவேண்டும்

(கொழும்பு)

''சட்டத்துறை பீடத்தால் நடத்தப்படும் ஒவ்வொரு பரீட்சையிலும் ஆங்கிலம் கட்டாய பாடமாக்குவதை மக்கள் எதிர்ப்பது நியாயமாகும் பாடசாலைகளில் ஆங்கிலம் மூலம் கல்வி கைவிடப்பட்டதால் இந்த நிபந்தனை நியாயமற்றதாகும். அதே சமயம் இது மாறும் நாம் வளர்த்துவந்த சட்டக்கல்வியின் உயர்ந்த தரம் ஆங்கில அறிவின்மையால் தளர்ந்துபோவதை நாம்

### — பேராசிரியர் த. நடராஜா —

காண்கின்ருேம். காரணகாரிய முறையில் தொகுக்கபட்ட சட்ட அறிக்கைகள், வ்தானங்கள், சட்டத்தால் கருத்துரைகள் எல்லாம் ஆங்கிலத்திலேயே உண்டு

''எனவே, இந்த முரண்பாட்டை எவ்வாறு தீர்ப்போம்? சட்ட ஆசிரியர்களின் மனச்சான்றை நலிவுறுத்தும் பிரச்னை இதுவே. ஆங்கிலம் நன்ருகப் படித்த மாணவர் இந்தப் பிரத்தியேகமான வசதியைக்கொண்டு கிராமப்புறத்து மாணவர்களுக்குரிய சமத்துவ சந்தர்ப்பத்தைப் பறிப்பது நியாயமா?''

''ஆங்கிலத்தை எவ்வாறு திறமையுடன் ஒரு கட்டாயமாகக் கற்றபோதிலும் மிக நுணுக்கமான கருத்துக்களை இன்றைய சட்ட மாணவர் புரிவது கடினம் எனவே இதற்கு வழி காண்பது எங்ஙனம்?''

கொழும்பு பல்கலைக்கழகம் அண்மையில் நடத்திய பட்டமளிப்பு விழாவில், அங்கு பல்லாண்டுகளாகச் சட்டப் பேராசிரியராகவும், சட்டத் துறைப்பீடத் தலைவராகவும் பணிபுரிந்த பேராசிரியர் த. நடராசா இவ்வினுவைத் தமது பட்டமளிப்பு விழாப் பேருரையில் எழுப்பியிருக்கிருர்.

தமது பல்கலைக்கழகம் சட்டக்கலாநிதிப் பட்டமளித்துக் கௌரவித்தற்கும், தமக்கு இந்தப் பேருரை அளிக்கச் சந்தர்ப்பம் அளித்ததற்கும் நன்றி கூறி தொடர்ந்து பேசியபோது:-

''தேசிய மொழிகளில் தமிழிலும் சிங்களத்திலும் ஒரு புதிய அசகமன நூல் இலங்கைச் சட்டத் தொகுப்பென்று கொள்ளக்கூடிய தத்துவம் நிறைந்தநூல இன்றைய அவசிய தேவை என்ருர்.

பேராசிரியரின் முன்னேர் சேர் அருணுசலம், கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி பல்கலைக்கழகம் உருவாகவும், சட்டக் கல்வியின் தாற்பரியத்தை புத்தம் புதிய சிந்தனைகளைப் பரப்புவதற்கும் முன்னேடிகளாகவிருந்ததை வரலாற்று ரீதியில் குறிப்பிட்டார்.

இன்றைய குழப்ப நிலையை சமாதான உணர்வை ஊட்டுவதற்கு நாட்டின் பல்கலைக்கழக [illegible]

## ஆயுதப்படையினரால் கைதானவர்களில் 120 பேர் சிவில் தொழிலாளர்!

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்டத்திலிருந்து பாதுகாப்புப் படையினரால் விசாரணைக்குக் கொண்டுசெல்லப்பட்டவர்களில் 120க்கும் அதிகமானேர் சிவல் தொழிலாளர்களேயாவர். இச்சிவல் தொழிலாளர்களான வாலிபர்களை உடன்விடுவிக்கவேண்டும்''

இவ்வாறு கோரும் அவசரக் கடிதம் ஒன்றை முன்னுள் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினரும், வட மாகாண தெங்குபனம்பொருள் கூட்டுறவுச் சங்க சமாஜ முன்னுள் தலைவருமான திரு சு நடேசு தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலிக்கு அனுப்பி வைத்துள்ளார் (க)

## பலத்த மழை

(சுழிபுரம்)

சுழிபுரம், தொல்புரம், மூளாய், பண்ணுகம் ஆகிய கிராமங்களில் தொடர்ந்து பெய்யும் மழையினுலும், பலத்த காற்றினுலும் பனை மரங்கள், கறிமுருங்கை மரங்கள் வேரோடு சரிந்துள்ளன சில இடங்களில்சில பாரியமரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன மாட்டுத் தொழுவங்கள் சிறு குடிசைகள் ஆகியனவும்சரிந்து [illegible]. எங்கும் மழை வெள்ளம் தேங்கி நிற்கின்றது.


## மாவட்ட நீதிபதி

[புலோலி]

புலோலி மேற்கு பருத்தித்துறையைச் சேர்ந்த சட்டத்தரணி ஏ என். இராமச்சந்திரன் மாவட்ட நீதிபதியாக நீதிச் சேவை ஆணைக்குழுவினுல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியாகவும், முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியாகவும் பொறுப்பேற்றுள்ளார் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி திரு. வி பி, சுந்தரலிங்கம் ஊர்காவற்றுறைக்கு இடமாற்றம் பெறுவார். (க)

பிலிப்ஸ் 30.48 செ…
டிவி 90° உடனடி …
யவை, VHF/UHF…
நிறுத்த சுழல்விசை…
முன்னிணைந்த ஒலி…
மின்சக்தியிலும் 12…
யது. விலை. ரூ. 2,9…



தரம…
டெ…

PHILIPS
PH…
நீங்கள்…

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...வன்முறையாளரல்லர்; ...கவாதிகளும் அல்லர்''

## ...ாகுலவுக்கு 'புலிகள்' விளக்கம்

ம்]
றையாளர்
வாதிகளும்
மைகளாக
சுதந்
க, சமா
விரும்பு
தமிழீழ
இயக்கத்
புலிகள்''
ாதப் பத்
கப் பட்

ரோவுக்கு
தலைப்
க எழுதி
லையங்கத்
ன்டவாறு

தரிவிக்கப்

ம் உங்க
த்தேவை
ற பிக்கு
ங்களுக்கு
பது புரி
நச ஒழுங்
உறவு
தம் மூல
று நீங்கள்
ஞ்ஞானி

கூறவில்லையா?

தர்மம் என்பது மனிதம் அல்லவா? தார்மீக வாழ்வின் சாரம் அல்லவா?

உங்களுக்கு நாம் தெட்டத் தெளிவாக கூற விரும்புவது இதைத்தான்.

பௌத்தத்தின் சார்பில் தர்மத்தின் சார்பில் சமாதானத்தை நீங்கள் விரும்புவதாயின், ஆட்சியாளருடன் பேச்சு வார்த்தை நடத்துங்கள். தமிழ் மக்களுக்கு எதிராக வன்முறைகளை நிறுத்தி, சட்ட மீறல் நடவடிக்கைகளைக் கைவிடுமாறு கேளுங்கள். இனக் கொலைகளைக் கைவிடுமாறு வேண்டுகோள் விடுங்கள். ஆயுதப் படைகளைத் தமிழ் மண்ணிலிருந்து வெளியேற்றுமாறு அரசைக் கேளுங்கள்.

அடிமைத் தளைகள் அகன்ற சுதந்திரமான, சமாதானமான, நிம்மதியான வாழ்வை இலட்சியமாகக் கொண்டே நாம் போராடி வருகிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழவிடுதலைப் போராளிகளுக்கு வண. வல்பொல தேரோ பேச்சு வார்த்தை நடத்த அழைப்பு விடுத்திருந்ததற்குப் பதிலாகவே மேற்கண்டவை அப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (கி)

## செய்தி அறிக்கை ஒலிபரப்பில் மாற்றம்

(கொழும்)

1985ம் ஆண்டு ஜனவரி முதலாந்திகதி முதல் இலங்கை வானொலி தமிழ்ச் செய்தி அறிக்கை நேரத்தில் மாற்றம் கொண்டுவரப்படும்,

தற்போது மாலை ஆறு மணிக்கு ஒலிபரப்பாகும் செய்தி அறிக்கை மாலை 6-15 மணிக்கும் இரவு ஒன்பதுமணி செய்தி அறிக்கை இரவு 9-15 மணிக்கும் ஒலிபரப்பாகும்

காலை ஆறுமணி மதியம் 12-45 மணி தமிழ் செய்தி அறிக்கை நேரங்களில் எதுவித மாற்றமும் இருக்காது என்றும் அறிவிக்கப்பட்டது.

## கொட்டடியில் புதிய வீதி திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். கொட்டடி வீதியையும், மானிப்பாய் வீதியையும் இணைக்கும் புதிய வீதி 85 ஜனவரி 15ம் தேதிக்கும், 20ம் திகதிக்குமிடையில் திறந்து வைக்கப்படும்.

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. இ. வி கே. சிவஞானம், சபையின் கமிட்டி அறையில் நடந்த பட்ஜட் கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறினர்!

அவர் மேலும்கூறியதாவது: யாழ்.நகரிலுள்ள 6மகப்பேற்று நிலையங்களை அபிவிருத்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். சுற்றுடல் சுகாதாரத்திற்கு குழு ஒன்று அமைக்கப்படும். இதற்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்புவழங்கவேண்டும்,

தீயணைக்கும்படை இம்மாத ஆரம்பத்தில் லண்டனிலிருந்து அனுப்பிவைக்கப் பட்டுள்ளது இம்மாத இறுதியில் இங்கு வந்து சேரும். இதற்கு எதிர்பார்த்த நிதி இன்னும் கிடைக்கவில்லை. பொதுமக்களும் வர்த்தகர்களும் இதற்கு உதவவேண்டும். (க)

## அரிசி விலை அதிகரிப்பு

[மன்னார்]

மன்னார் பகுதியில் அரிசியின் விலை மேலும் அதிகரித்துள்ளது.

கடந்த வாரம் 10 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டு வந் ஒரு கிலோ தரமான அரிசி தற்போது 12 ரூபாவாக விற்பனைசெய்யப்பட்டு வருகிறது.

## இறால் கொள்வனவு விற்பனை நிலையம் மூடப்பட்டது

(மன்னார்)

தற்போது அமுல்படுத்தப் பட்டு வரும் கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளையடுத்து பேசாலைப் பகுதியிலுள்ள தனியார் இறால் கொள்வனவு நிலையங்கள் யாவும் மூடப்பட்டுள்ளன.

இதனால் இறால் கொள்வனவு நிலையங்களில் வேலைசெய்து வந்த நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகள் வேலைவாய்ப்பை இழந்துள்ளனர்.

## பாவனையாளர் குறைபாடு

(கரவெட்டி)

நெல்லியடியிலுள்ள சில வர்த்தக ஸ்தாபனங்களினால் பாவனையாளர்களுக்கு ஏற்பட்டுள்ள குறைபாடுகள் பற்றி உள்நாட்டு உதவி வர்த்தக ஆணையாளருக்கு முறையீடு செய்யப்பட்டுள்ளது.


## காயமடைந்த பல்கலைக்கழக மாணவி

(வவனியா)

ஆசிகுளம் என்ற கிராமத்தில் நடந்த தாக்குதல் சம்பவத்தில் வெட்டுக் காயத்திற்கிலக்காகி அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுச் சிகிச்சை பெற்றுவந்த யாழ். பல்கலைக் கழக மாணவி செல்வி நடனராணி சிதம்பலப் பிள்ளை வவனியா அரசிப் ர் ஆஸ்பத்திரிக்கு அனு ப் பட்டு அதன் பின்னர் யத்ழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்காக மா றப் பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் க யமடைந்த இவரது சகோதரி இராசமணி வ னிய ஆஸ்பத்திரியல சிகிச்சை பெற்று வருகின்றார். (க)


48 செ.மீ. (12'') கறுப்பு வெள்ளை
டனடி ஆரம்ப படக் குழாய்கள் பொருந்தி
/UHF தொனிக்கட்டுப்பாடு, ஆரம்ப/
ல்விசை, தொனி,பிரகாசம், பிம்ப பேதம்,
த ஒலிபெருக்கி ஆகிய சிறப்புக்களோடு
லும் 12V கார்பட்டரியிலும் இயங்கக்கூடி
ரூ. 2,975/- மட்டுமே, (US$ 85)




பிலிப்ஸ் 35.56 செ.மீ. (14'') கறுப்பு வெள்ளை டிவி 90° உடனடி ஆரம்ப படக்குழாய்கள் பொருந்தியவை, VHF/UHF தொனிக் கட்டுப்பாடு, சரியான படத்தெரிவுக் கேற்றதிரையில் செங்குத்துக் கட்டக் காட்சி. (சேவை வழி தெரிவுசெய்யப்பட்டதும் தானுக மறைந்துவிடும்.)

ஆரம்ப/நிறுத்த சுழல் விசை, தொனி, பிரகாசம், பிம்பபேதம். ஆகிய சிறப்புக்களோடு மின்சக்தி அல்லது 12 V கார் பட்டரியில் இயங்கக்கூடியது. விலை. ரூ 3,850/- மட்டுமே, (US$110)



பிலிப்ஸ் 60,96 செ. மீ. (24'') கறுப்பு வெள்ளை டிவி 110° உடனடி ஆரம்ப படக்குழாய், முன் தெரிவுக்கேற்ற 6 சேவைத் தொடு விசைகள், ஆரம்ப/நிறுத்த சுழல்விசை, தொனி, பிரகாசம், பிம்பபேதம், முன்னிணைந்த பெரிய தரச்சிறப்பான ஒலிபெருக்கி ஆகியசிறப்புகள் கொண்டது. விலை. ரூ 6975/- மட்டுமே, (US$195)



# மிகக் குறைந்தவிலையில்... ...மான கறுப்பு வெள்ளை தொலைகாட்சிப் ...பெட்டிகளை பிலிப்ஸ் வழங்குகிறது.

பிலிப்ஸ் தெரிவு செய்யுங்கள், அது முழுமையாக உஷ்ண வலயத்துக்குப் பொருந்தும். கட்டுப்படியாகும் விலையில் படத்திற்கும் தொனிக்கும் தனிச் சிறப்புக் கொண்ட நீடித்துழைக்கும் டச்சு டி.வி பிலிப்ஸ்.

- சுலபமான கட்டுப்பணத்திட்டம் (1/3 உடனடியாகவும் மீதி 12, 24 அல்லது 36 மாதாந்த கட்டுப்பணம்.)
- 1வருட உத்தரவாதம் (படக்குழாய்களுக்கு 3வருட உத்தரவாதம்)
- மேலதிக விபரங்களுக்கு தி பிரன்ஸ் கூமபனியை நாடுங்கள்

ஏகபிரதிநிதிகள்.
ஹெய்லீஸ் லிமிட்டெட்
(பாவனையாளர் மின்னியக்கப் பிரிவு)
25, ஃபொஸ்டர் லேன்,
கொழும்பு 10.
தொலைபேசி: 91181-9
(சேவைப்பிரிவு, தொலைபேசி: 597201)
பிலிப்ஸ் காட்சியறைகள், 646 காலிவீதி, கொழும்பு 3.
(தொலைபேசி: 586958)
கடை இல 2 நிலத்தளம், சுங்கத்தீர்வையற்றகடைத் தொகுதி.காலி வீதி, கொழும்பு 3
நாடெங்குமுள்ள பிலிப்ஸ் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

PHILIPS
...ங்கள் சிறந்ததைப் பாவிப்பதே எங்கள் நோக்கம்.

HTL HL 1553


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இன, மதக் கூச்சலுக்கு அப்பால் தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீருங்கள்"

## இ. கம்யூனிஸ்ட் கட்சி (இடது) அறிக்கை

[யாழ்ப்பாணம்]

"பேரினவாத சக்திகளின் குறுகிய இன, மதக் கூக்குரல்களுக்கு அப்பால் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்னைகளுக்கும், அவர்களது நியாயமான அபிலாஷைகளுக்கும் ஏற்றவாறான ஒரு அரசியல் தீர்வே இன்று அவசியமானதாகும். இத்தகைய தீர்வினால் மட்டுமே நாட்டின் சுதந்திரத்திற்கும், இறைமைக்கும் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலைத் தடுத்து நிறுத்த முடியும்."

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) அரசியற் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் இன்றைய அரசியல்நிலை பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையிற் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில் குறிப்பிடுவதாவது:-

கடந்த ஒருவருட காலமாக காலங் கடத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுவந்த சர்வகட்சி மகாநாடும், அதன் மூலம் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளும் அர்த்தமற்றவையாகியுள்ளன. இவ்வேளை நாட்டை மேலும் நாசத்திற்குள் இட்டுச் செல்லக்கூடிய பேரினவாத சக்திகளின் இன, மதக் கூச்சல்கள் கிளப்பப்படுகின்றன. இத்தகைய சக்திகள் தமது குறுகிய நோக்கங்களை அடைய விரும்புகின்றனவே தவிர நாட்டின் மீதும், மக்களின் மீதும் எவ்வித அக்கறையும் கொண்டிருக்கவில்லை.

"அரசின் தலைவர்கள் அரசியல் தீர்வு பற்றி வெறுமனே கூறுகிறார்களே தவிர அவர்களது முழுக்கவனமும் இராணுவ நடவடிக்கைகளை விஸ்தரித்து அதில் தங்கி நிற்பதையே நோக்காக்க கொண்டுள்ளார். அதனால் தமிழ் மக்கள் உயிர், உடைமைகள் அழிப்பிற்கும்' வரைமுறையற்ற கைது, தடுப்புக்காவல், சித்திரவதை போன்றவற்றால் மட்டுமன்றி பெண்கள் மானபங்கப் படுத்தலுக்கும் ஆளாக்கப்பட்டு வருகின்றனர்.

போக்குவரத்துத் தடை, எரிபொருள் தட்டுப்பாடு விவசாயம் பாதிப்பு, அன்றாடத் தொழில் பாதிப்பு, உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு, விலையேற்றம் போன்றவற்றால் பெரும் துன்பம் அனுபவிக்கின்றனர். ஆயிரக் கணக்கில் மக்கள் தமது இருப்பிடங்களை வீட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகள் போல் மிகக் கொடூரமாகவும், கேவலமாகவும் நடத்தக்கூடிய இன்றைய நிலையை எமது கட்சி மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது. இம்மோசமான நடவடிக்கைகளுக்கு அரசாங்கமே பொறுப்பாளியாகும்.

"இன்றைய நெருக்கடி மிக்க நிலையில் தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளையும், அடிப்படைப் பிரச்னைகளையும் உள்ளடக்கக் கூடியதான பிரதேச சுயாட்சிக்கான வழிமுறையை அரசியல் தீர்வாகக் கொள்ள முன்வருமாறு அரசுக்கும், தேச நலன் விரும்பும் அனைத்துச் சக்திகளுக்கும் எமது கட்சி அறைகூவல் விடுகின்றது.

அதுவே நாட்டின் சுதந்திரத்தையும், இறைமையையும் பாதுகாக்கக்கூடிய அரசியல் தீர்வாக அமையமுடியும் என்பதே எமது கட்சியின் உறுதியான கருத்தாகும்."

# இப்படியும் நடக்கிறது

"அவனுக்கு (1983—1984 1ம் மங்கு சனி) 3-ல் வியாழன் + 7½ (துரியோதனன் நாடு. நகரம் இழந்தான்). 1984—1985) 4ல் வியாழன். துரியோதனனின் தலை பறந்தது என்று செட்டி தம்பையா வாத்தியார் கிழவன் பாடியது இன்றும் காதில் கேட்கிறது. சனி ஆட்சி. உச்சம் என்றால் அரசியல். வியாழன்பகை என்றால்... நல்ல உத்தியோகம் இல்லை. உயிர்ப்பயம். வியாழன் நட்பு என்றால் 7½ அவ்வளவு தாக்காது. வியாழன்-பகை இதுகூடாது இந்த நினைவுகள் எல்லாம் மாறி மாறி கனவிலும் நனவிலும் எனக்கு வரும். கவனம்..."

"என்ன......யாருடைய சாதகக் குறிப்பு. தை பிறந்தால் ஏதும் திருமணமா?" என்று நீங்கள் புறுபுறுப்பது காதில் விழுகிறது. விஷயம் இது தான்;

மேற்படிக் கடிதம், நவம்பர் மாதம் ஒரு தந்தைக்கு வெளி நாடொன்றிலிருந்து அவரது உறவினர் அனுப்பி வைத்தது.

டிசம்பரில் அந்தத் தந்தையின் மைந்தன்......'மிகவும் தேடப்படுபவர், என்று கூறப்பட்டு, கைதாகி கடுமையான விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளார்.

— ஊருவிடு

## கடத்தல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கமநல சேவை நிலையத்துக்குச் சொந்தமான உழவுயந்திரத்தின் பெட்டியை இரு தினங்களுக்கு முன்னர் இனந்தெரியாதவர்கள் கடத்திச் சென்றுள்ளனர்.

## மின்னிணைப்பு வழங்கப்படும்

(புலோலி)

கற்கோவளம் சுய உதவி வீடமைப்புத்திட்டப் பகுதிக்கு சுமார் 50,000 ரூபா செலவில் மின்னிணைப்பு வழங்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை இலங்கை மின்சார சபை மேற்கொண்டுள்ளது.

இப்பகுதிக்கு மின்னிணைப்பு வழங்க வேண்டுமென கற்கோவளம் சுய உதவி வீடமைப்பு அபிவிருத்திச் சங்கத் தலைவர் கோரிக்கை விடுத்திருப்பதைத் தொடர்ந்தே இம் மின்னிணைப்புக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடையாளம் காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இருபாலையில் துப்பாக்கி சூட்டுக்கு பலியான மற்றொருவர் குழந்தை வேலு சுப்பிரமணியம் (22வயது) என்று நேற்று அடையாளம் காணப்பட்டது.

இவரது சடலம் கடந்த 4 தினங்களாக யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்து.

யாழ். பதில் நீதவான் கே. பி. எஸ். வரதராசா பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். [க]

## கூலி வேலைகள் பாதிப்பு

(வண்ணார்பண்ணை)

தமது பாதுகாப்பைக்கருதி இளைஞர்கள் வெளியில் வழமை போல் நடமாட முடியாத நிலை ஏற்படுவதால் வடபகுதியில் கட்டிடப்பகுதி, விவசாயப் பகுதி கூலிவேலைகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

பல இடங்களில் தொழிலாளர்கள் இல்லாததால் ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக கமக்காரர்களும், கட்டிட ஒப்பந்தக்காரர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

## விவசாயிகளுக்கு களஞ்சியம்

(வண்ணார்பண்ணை)

விவசாயிகளின் நலன் கருதியும், கமத்தொழில் விஸ்தரிப்பின் முன்னேற்றம் கருதியும் மண்டைதீவில் உரக்களஞ்சியம் கட்டப்பட்டு வருகிறது.

கமத்தொழில் சேவைத் திணைக்களத்தினால் கட்டப்பட்டுவரும் இக் களஞ்சியத்திற்கான அத்திவாரக்கல்லை யாழ். மாவட்டகமத் தொழில் சேவை ஆணையாளர் திரு. க. பரமலிங்கம்நாட்டிவைத்தார்.

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் இக் களஞ்சியம் அமைந்துள்ளது.

## இரும்புப் 'பைப்' கொள்ளை

[சாவகச்சேரி]

சாவகச்சேரித் தொகுதிக்கான குடிநீர் விநியோகத் திட்டவேலைகளை மேற்கொள்ளும் 'சமக்கோன்' கம்பனியின் சாவகச்சேரி களஞ்சியசாலைக்கு மினிவான் ஒன்றில்வந்த இனந் தெரியாத இளைஞர்கள் சிலர் அங்கிருந்த ஒரு இரும்புப் பைப்பை எடுத்துச் சென்றுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

## எதிர்க்கட்சி தலைவர்களின் வெற்றி

[புதுடில்லி]

இந்திய எதிர்கட்சி வேட்பாளர்களில் தலித் மஸ்தூர் கிஸான் தலைவர் சரண்சிங் காங்கிரஸ்[எஸ்] தலைவர் சரத் பவார், ஜனதா கட்சியைச் சேர்ந்த மது தண்டவதே பியூ பட்நாயக், காங்கிரஸ்[ஜே] தலைவர் ஜெக ஜீவன்ராம், மற்றும் உன்னிகிருஸ்ணன் ஆகியோர் வெற்றி பெற்றனர்.

## பாதுகாப்பு கோருகின்றனர்

[யாழ்ப்பாணம்]

பாதுகாப்புப் படையினரால் அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சூரியோதய கிளை முகாமையாளரான ச. மகேஸ்வரன் என்பவர் கொலை செய்யப்பட்டதனாலும், அவரோடு வேலைசெய்த விற்பனையாளர் கு. தருமலிங்கம் என்பவர் தாக்கப்பட்டமையினாலும் தமக்கு ஏற்ற பாதுகாப்புத் தரும்வரை ஊழியர்கள்வேலைக்குச் செல்வதில்லை என்று தீர்மானித்துள்ளனர்.

இதுசம்பந்தமான மகஜர் ஒன்றைக் கூட்டுறவு ஊழியர் சங்கம் வலி கிழக்கு வட பகுதி ப.நோ.கூ. சங்கத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## "தமிழ் இளைஞரின் இடர்தீர்க்க இறைவழிபாட்டில் ஈடுபடுக"

(வண்ணார்பண்ணை)

"மனிதர்களின் எந்த இடர் நிலைகளையும் இறைவனால் ட்டுமே தீர்த்துவைக்க முடியும். மனிதர்களால் உலகத்தில் எதுவும் நடப்பதில்லை. ஆகவே தமிழ் இளைஞர்கள் இன்றைய இக்கட்டான சூழ்நிலைகளை மாற்றிக்கொள்ள இறைவழிபாட்டையே முக்கிய மருந்தாகக் கைக்கொள்ள வேண்டும்'? என்று திருவெண்பாவை தினத்தையொட்டி யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவர் இந்து இளைஞர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இப்பேரவையின் தலைவர் திரு. தி. சி. சண்முகலிங்கம் பேரவையின் சார்பில் விடுத்துள்ள இவ் வேண்டுதலில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"ஆத்மீக உணர்வும், தெய்வ நம்பிக்கையும் கொண்ட இடைவிடாத வழிபாட்டின்மூலம்தான் நாம் எந்த இடர்களையும் களைய முடியும். எனவே நம்பிக்கையுடன் இறைவனை அணுகி இடர்களைக் களைய எமது தொண்டர்கள் முயலவேண்டும். இறைவனிடமே வரம் பெற்ற சூரன்கூட இறுதியில் தனது வரத்தின் நிலையை உணர்ந்து இறைவனடி சேர்ந்ததை எமது சமயம் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது. ஆகவே இவற்றை மனதில் வைத்து இத் திருவெம்பாவை தினத்தை அணுகுவதுடன் இடர்கள் தீர இறைவழிபாட்டையே நாம் அனைவரும் கைக்கொள்ள வேண்டும்."

# ஆஸ்பத்திரியில் நடந்த கொள்ளை

(கல்முனை

கல்முனை அரசினர் ஆஸ்பத்திரியில், பெறுமதிமிக்க மருந்துகளும் மற்றும் 'பண்டேஜ்' கள், ஊசி மருந்துகள், ஊசி மருந்துகளை உடலில் ஏற்றுவதற்குப் பயன் படுத்தப்படும் கருவிகள் அனைத்தும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன!

நேற்றுக்காலை 15 பேர் ஆயுத முனையில் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து அங்கு நின்ற சில ஊழியர்களைப் பயமுறுத்தி அவர்களை ஒரு அறையில் வைத்துப் பூட்டிவிட்டு மேற்படி கொள்ளையை நடத்தியுள்ளனர்.

சம்பவம் நடந்த பின்னர் பூட்டை உடைத்து அந்த ஊழியர்கள் வெளியேறினர்.

## கறுப்புச் சந்தை

(நெடுந்தீவு)

கறுபுச்சந்தையில் டீசலின் விலை கலன் ஒன்று தொண்ணூறு ரூபாவாக விற்பனவு செய்யப்படுகின்றது, இவ்விலை அதிகரிப்பு புங்குடுதீவுப் பகுதிகளிலேயே நிலவிவருகின்றது.

## பருப்போ பருப்பு!

[யாழ்ப்பாணம்]

ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்ட மைசூர்பருப்பு சில தனியார் கடைகளிலும் விற்பனை செய்யப்படுகிறது

தனியார் கடைகளில் மசூர் பருப்பு கிலோ 30 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதாக கூறப்படுகிறது. (க)

## சீர்திருத்த

(3ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி

சன் உப தலைவர்கள் திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை, திரு. என். பிரேமதாசன் செயலாளர் திரு இ, அருட்செல்வம், உப செயலாளர் திரு. ஆர். யோகராசா திரு, கே. நாகேந்திரன். பொருளாளர்கள் திரு. கே. தர்மகுலசிங்கம் உப பொருளாளர் திரு. வி. செல்லக்கண்டு ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


ரெருசோ ஷிப்ஸ்

TERRAZZO CHIPS

IMPORTED

★ கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN and HOLLAND)
★ அலுமினியம் தகடுகள் (18g × 16g)
★ வெள்ளைச் சீமெந்து
★ காபரண்டம் கற்கள் (FLOOR CUTTING STONE)
★ TERRAZZO-மற்றும் தரைக்குத் தேவையான சகல பொருட்களும் கிடைக்குமிடம் RS. 55/-க்கு மேல்

றம் சன்ஸ்

443, பழைய சோனகத் தெரு, கொழும்பு- 12.

தொலைபேசி: 34411 — 31511


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ராணி** (யாழ்ப்பாணம்)
10-30, 2-00,
FUTURE WOMAN
(கண்டிப்பாக
(வயது வந்தவர்களுக்கு)

**றீகல் மினி**
10-15, 1-15
மோகன்-மாதவி
நடிக்கும்
பாலாஜியின்
**நிரபராதி**

இன்று முதல்
**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30. 2-00,
ஜெய்சங்கர்-நிர்மலா
சுந்தரராஜன
**நீதிதேவன்**
(புத்தம் புதிய பிரதி)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்
தினசரி 10-30, 2-30,
கமலஹாசன், ஸ்ரீதேவி
**தாயில்லாமல்
நானில்லை**
(ஈஸ்ட்மன் கலர்)

**வின்ஸர்** (யாழ்)
10-30, 2-15
ரஜனிகாந்த்-ராதா-சரிதா
சில்க்-தேங்காய்-மனோரமா
**சிவப்பு சூரியன்**
(ஈஸ்ட்மன் கலர்(

**லிடோ** சினிமா
தினசரி 10-30, 2-00
MISSION BATANGAS
(War Film -
Action packed)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-30,
சிவாஜி, கமலகாசன்,
ஸ்ரீதேவி
நடித்த
**சத்தியம்**
(ஈஸ்மன் கலர்)


# 17 பாடசாலைகளில் 10,000 பேர் தஞ்சம்!

## முல்லைத்தீவில் அகதிகள் பிரச்னை

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 10,000 மக்கள் கடந்த ஒரு வார காலமாக 17 பாடசாலைகளில், அமைக்கப்பட்டுள்ள அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளனர்.

சுமார் 24.000 கால் நடைகள், மற்றும் ஆடு, கோழி ஆகியவை உணவின்றி பாதிக்கப்பட்டுள்ளன

முகாம்களில் தொற்றுநோய் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. நூற்றுக்கு மேற்பட்டவர்கள் நோயினல் பாதிக்கப்பட்டு முகாம்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ட்ராக்டர் மற்றும் தனியார் வாகனப் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டுள்ளதால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

### பாடசாலை நிலை

அகதிகள் தொகை தினமும் அதிகரித்து வருவதால் ஜனவரி மாதம் 7ம் திகதி முல்லைத்தீவில் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சுமார் 4000 மக்கள் தங்கள் இல்லங்களிலிருந்து இம்முறை நத்தார் பண்டிகையைக் கொண்டாடமுடியாதநிலை ஏற்பட்டது. புது வருடத்தையாவது தங்கள் இல்லங்களிலிருந்து கொண்டாட ஒழுங்கு செய்யுமாறு அகதிகள் கேட்டுள்ளனர்.

### மலைநாட்டுத் தமிழர்கள்

10,000 அகதிகளில் சுமார் 3000 அகதிகள் மலை நாட்டு தமிழர்களாவர். இவர்கள் இத்துடன் 8வது தடவை பாதிக்கப்பட்டவர்களாகும்

தென்னமரவடியில் பாதிக்கப்பட்ட 152 குடும்பங்கள் கொக்கிளாயிலுள்ள கோவில் ஒன்றில் அகதிகளாக தங்கியிருந்தனர். இவர்களும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு விட்டதால் தற்போது முல்லைத்தீவை அடைந்துள்ளனர்.

### கிராம மக்கள் பெரும் பாதிப்பு

கொக்கிளாய் கொக்குத்தொடுவாய், கருணாட்டுகேணி நாயாறு, செம்மலை, அலம்பில், குமுழமுனை. ஒதியமலை' தென்னமரவடி, ஆகிய கிராமங்களிலுள்ள சுமார் 10.000 மக்கள் அகதிகளாகி தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி விட்டனர்.

வீடுகளில்உள்ள கால் நடைகளை கவனிக்க சில விவசாயிகள் தங்கள் வீடுகளுக்குச் செல்ல முல்லைத்தீவு இணைப்பு அதிகாரியுடன் தொடர்பு கொண்டு முல்லைத்தீவு, அரசாங்க அதிபர் திரு. கே ஞானச்சந்திரன், விசேட அனுமதி பெற்றுக் கொடுத்துள்ளார்.

அகதிகள் முகாம்களில் உணவுகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள பொது ஸ்தாபனங்கள் நலன் புரிக் குடும்பங்கள் உணவுப் பெருட்கள், துணிகள் மருந்துவகைகள் ஆகியவற்றை அனுப்பி வைத்துள்ளன.

[க]

## சாரணர் வேலைநிகழ்ச்சி; புதியமுறை

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்டச் சாரணர்களின் வருடாந்த வேலைவார நிகழ்ச்சிகளில் இவ்வருடம் புதியமுறை அமுலுக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது. வேலையின் மகத்துவத்தை உணரவைக்கும் முகமாக வருடந்தோறும் வேலைவார நிகழ்ச்சி நடாத்தப்பட்டு வருகின்றது.

இத்தகவலை யாழ். மாவட்ட சாரண ஆணையாளர் திரு. எஸ், வரதலிங்கம் தெரிவித்துள்ளார் முன்பு சாரணர்கள் தனித்தனியாகவே வேலை வார அட்டைகளைக் கொண்டு சென்றுதனியாக வேலைசெய்து கூலிபெற்றுவந்தனர்.

இந்தமுறை தற்போது மாற்றம் செய்யப்பட்டுச் சாரணர்கள் குழுவாக அணிக்கொரு அட்டையாகக் கொண்டுசென்று வேலைசெய்து தமது அணிக்குரிய பணத்தை அட்டையில் பதிந்து கூலியைப் பெறுவதுதான் புதியமுறையாகும்.

## நத்தார் அன்பளிப்பு

(சாவகச்சேரி)

நத்தார் பண்டிகையை முன்னிட்டு யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தினர் கைதடி-மறவன்புலவு, கெற்பேலி, நாவற்குளி போன்ற இடங்களில் இருக்கின்ற அகதிகளுக்கு இனிப்பு வகைகளையும், உணவு வகைகளையும் அன்பளிப்புச் செய்துள்ளார்.

## விசாரணையின்பின் விடுதலை

(சாவகச்சேரி)

தீவிரவாதிகளுடன் தொடர்புள்ளவர் எனச் சந்தேகத்தின்பேரில் கொழும்பில் சுமார் ஒரு மாதத்துக்கு முன்னர் கைது செய்யப்பட்ட சரசாலையைச் சேர்ந்த இராசையா யோகானப்தன் என்பவர்பாதுகாப்புப்படையினரால் விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

# வவனியாவில் அரிசி தட்டுப்பாடு!

(வவனியா)

வவனியா நகரில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது இங்குள்ள அரிசி ஆலைகளில் பெரும்பாலானவை ஸ்தம்பிதம் அடைந்துள்ளன

ஆலைகளில் வேலைகள் இடம்பெருததினுல் கையிருப்பிலுள்ள அரிசி முடிந்ததுடன் அரிசிக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவக்கூடிய சத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

வவனியா நகரில் மட்டும் 50 இற்கு மேற்பட்ட அரிசி ஆலைகள் உண்டு. அவ்வாலைகளில் வேலைகள் நடைபெருததினுல் நாட் கூலிக்கு வேலைசெய்யும் தொழிலாளர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். (கி)

## அத்தியாவசியப் பொருட்களை பெறுவதில் பெரும் கஷ்டம்

[பண்டத்தரிப்பு]

"பொதுமக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை லொறி மூலம் எடுத்து வந்து விநியோகிப்பதற்கு எரிபொருள் பெறுவதில் பெரும் கஷ்டங்களைப் பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் எதிர்நோக்குகின்றது இங்கு இலகுவாக எரிபொருள் பெறுவதற்குப் பண்டத்தரிப்பிலுள்ள பெற்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் அங்கீகாரம் பெற்ற விநியோகத்தருக்குப் போதுமான அளவு எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு யாழ் மாவட்ட அரசாங்க அதிபரைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று பண்டத்தரிப்புப் பாவனையாளர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது சங்கத்தலைவர் வைத்தியகலாநிதி பாக்கியநாதர் அத்தனுசியார் தலைமையில் பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பண்டத்தரிபபு ப. நோ. கூ. சங்கத்தின் பொதுமுகாமையாளர் திரு. இ. இராசசுந்தரமும் கலந்து கொண்டார்.

பொதுமக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களைத் தட்டுப்பாடு ஏதுமின்றிஎடுத்து வந்து வழங்குவதற்குச் சங்கம் தயாராக இருப்பதாகவும் டீசல் தட்டுப்பாட்டினுல் லொறிகள் ஓடமுடியாத நிலையில் இருப்பதாகவும் திரு. இராசசுந்தரம் அங்கு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

பண்டத்தரிப்பு அங்கீகாரம் பெற்ற எரிபொருள் விநியோகத்தருக்கு டீசலை அனுப்பி வைக்க ஒழுங்குகள் செய்யுமாறு வலிகாமம் தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் ஊடாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபரைக் கேட்டுக் கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டது.


L. P. Gas
இங்கே பெற்றுக் கொள்ளலாம்.
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.


## காரைநகர் பிரஜைகள் குழு

(காரைநகர்)

காரைநகர் பிரஜைகள் குழு கடந்த சனிக்கிழமை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது யாழ்ற்ரன் கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாகிகள் வருமாறு:

தலைவர்: திரு பொ. நவரத்தினம் (உலக சமாதானக் குழு அங்கத்தவர்).

உபதலைவர்கள்: ச. சபாபதிப்பிள்ளை, செ. தேவதாசன், துணைச்செயலாளர்கள்: எஸ் ஏ.கே. ஏனுதிநாதன், சேனுதிராசா, தனுதிகாரி: கே வேலுப்பிள்ளை.

அங்கத்தவர்களாகபதினெரு பேர் காரை வாழ் மக்கள் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்.




யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்

நொடிப்பொழுதில்
தெளிவான சர்வதேச
தொலைபேசி ரெலெக்ஸ்
அழைப்புகளுக்கு
இன்றே நாடுங்கள் - யுனிக்

24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்
28/18 - 11 மகாத்மா காந்தி ரோட்,
(சலுசலவுக்கு அண்மையில)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்
அவுஸதிரேலியா கட்டிடம
த.பெ 1917, 54 யோர்க் வீதி, கொழும்பு :
ரெலெக்ஸ.- 21652. 21742 21918 21931, PERIMP CE
தொலைபேசி:-22726 547884. 548626, 549065, 549066


## நீதிமன்றக் காவலாளி தாக்கப்பட்டார்!

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதவான் நீதிமன்ற காவலாளி தங்கராசா நேற்று முன்தினம் காலை கடமைக்கு வரும்போது ஆயுதப்படையினரால் தாககப்பட்டார்.

ஆயுதப்படையினரே இவரைத் தாக்கியதாக பொலிஸில் புகார்செய்யப்பட்டிருப்பதுடன், இராணுவ மேலிடத்திற்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது

சைக்கிலில் யாழ்ப்பாணம் நோக்கி அவர் வந்துகொண்டிருந்த சமயம் எதிரில் வந்த ஆயுதப்படையினர், அவரை மறித்து விசாரித்தபோது அவர் நீதிமன்றக் கடிதத்தையும், அடையாள அட்டையையும் காட்டியபோது, இரண்டையும் அவர்கள் கிழித்தெறிந்துவிட்டுப் பலமாகத் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

அவரதுசைக்கிலையும் குடையையும், சேதப்படுத்தியதுன், அவர் கொண்டுவந்த உணவுப் பார்சலையும் வீசியதாகவும் கூறப்படுகிறது.

இரவுக் காவலாளியிடம் பொறுப்பை ஏற்பதற்காக, அவர் காலை 7 மணிக்கு, யாழ். நீதிமன்றத்திற்கு வந்துகொண்டிருந்தபோது இச்சம்பவம் நடந்தது. (க)

## மேத்தாவே கூடுதல் வாக்குகள் பெற்றவர்

(புதுடில்லி)

இந்திய லோகசபைத் தேர்தலில் மிகக்கூடுதலான பெரும்பான்மை வாக்குகளைப்பெற்றவர் அம்தபாத் தொகுதியில் வெற்றிபெற்ற திரு மேத்தா ஆவார்.

இந்திரா காங்கிரஸ் வேட்பாளரான இவர் 3 லட்சத்து 31 ஆயிரம் மேலதிக வாக்குகளினுல் வெற்றி பெற்றுள்ளார். இதற்கு அடுத்ததாக அமெதி தொகுதியில் பிரதமர் ரஜீவ் காந்தி 3 லட்சத்து 14 ஆயிரம் மேலதிக வாக்குகளினுலும் அடுத்ததாக டில்லி கிழக்குத் தொகுதியில் போட்டியிட்ட தகவல்துறை அமைச்சர் எச். ஏ. எல். பஹத் 3 லட்சத்து 12 ஆயிரம் மேலதிக வாக்குகளினுலும் வெற்றிபெற்றனர். (சூ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

இந்தக் காரிருளில் எட்டத்தில் நடப்பதென்ன வென்பதை நான் அறிய விரும்பவில்லை. ஒரு படிமேல் நோக்கிச்சென்றாலே போதும்.

— கார்டினல்நியூமன்

# நமதுநோக்கு

## புதுயுகம்?

'இந்தியாவின் பெரு நோய் இந்திரா; இதனை நீக்குவதே எமது பொறுப்பு மிகுந்த முதற்கடமை' என்பதே இந்திய எதிர்க் கட்சிகள் பொதுத்தேர்தலுக்கு தெரிந்தெடுத்த சுலோகம்.

இதனை நாம் இன்று பரிகாசமெனக் கருதினாலும் இதனை பல நிறுவனங்கள் நாடுகள் சுவைத்ததை நாமறிவோம். இந்தியாவிலேயே சிலபத்திரிகைகள் சஞ்சிகைகள் இந்திராவைக் 'கழற்றுவதில்' பெரும் வரும்படி ஈட்டின. எங்கள் இலங்கையிலும் இந்த நெருக்கடிக்கு உருக்கொடுக்கும் இந்திரா அடுத்த வருடத்தில் இதனைத் தொடர்வது ஐயமெனச் சில பத்திரிகைகள் விருப்பம் தெரிவித்தன.

இன்றுடன் முடிவடையும் இவ்வருடம் இலங்கையைப் போல் இந்தியாவிற்கும் பல தொல்லைகள் நிறைந்த வருடமாயிற்று.

இதில் தூண்டில் போட நம்பியிருந்த அரசியல் தலைவர்களுக்கும் கட்சிகளுக்கும் மக்கள் உதவமுன் ஆண்டவன் படியளந்திருக்கிறான். இந்தியாவின் 'பெருநோய்' நீக்கப்பட்டது; ஒருபுதுயுகம் ஆரம்பிக்க வழிபிறந்ததா?

என்ன மடைமை புதுயுகம் என்று ஒன்றிருக்கிறதா? காலம் மாறப் பல மாற்றங்கள்—அற்புத மாற்றங்கள் ஏற்படுவது கண்கூடு. இவையெல்லாம் கால மாற்றங்கள் ஒழிய கருத்து மாற்றங்கள் அல்ல; சூரிய ஒளியில் எதுவும் புதிதல்ல என்பது ஆங்கிலபழமொழி.

அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதி வாஷிங்டனின் ஆளுமையை ஆராய்ந்தே அரசியல் நிபுணர்கள் அவர் கடைப்பிடித்த ஒழுக்கமே இன்று வரைக்கும் - 39 ஜனாதிபதிகள் ஆட்சியில் தேசத்தின் பெருமையைப் பேணிவர உதவுகின்றதென்று கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

மரபு என்றொரு அத்திவாரத்தை மறுப்பது மடைமை: அத்திவாரமளிக்காத பல கருத்துக்கள் எவ்வளவு பழமை வாய்ந்தவையானாலும்மரபாகா. எந்தப் புரட்சியிலும் மரபின் மணம் இருக்கவே செய்யும் இந்த உண்மையை பழம் பெரும் நாடாகிய பாரதம் இன்றைய புதுத்தேர்தலில் உறுதிப்படுத்தியிருக்கிறது.

வேதங்கள் பரம் பொருளைக்காணவில்லையென் கின்றன: இருப்பினும் இன்று வரைக்கும் அப் பொருளை விளங்கிக்கொள்ள அவையே உதவுகின்றன; இது இந்திய மரபு பற்றியது.

சுமார் இருநூற்றுப் பத்து வருடங்களுக்கு முன் உதயமான சுதந்திர அமெரிக்க தேசத்தைப் போல் அல்லது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் மலர்ந்த பாரத பண்பாடு ''ஒழுக்கம்'' என்ற பண்பை பெரிதாகப் பேணி வந்தது.

ஒழுக்கத்தின் எய்துவார் மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தாப்பழி என்ற பொய்யா மொழிதானும் ஒழுக்கம் என்பதற்கு வரைவிலக்கணம் கூறவில்லை

சுதந்திர இந்தியாவின் சிற்பி மகாத்மாகாந்தி, அவர் வாரிசு முதற் பிரதமர் ஜவஹர்லால்நேரு, நேருவின் வாரிசு இந்திரா இவர்கள் அனைவரும் தேசத்தின் பண்பைப் பேணிவளர்க்கும் தகைமையுடையவர்களாதலால் தலைமைப் பதவியை வகித்தார்கள்.

இன்றைய ஜனநாயக முறையில் என்ன குறைபாடுகள் இருந்தபோதும் ஒழுக்கத்தால் மேன்மை பெற்றவர்கள், நாட்டின் மேன்மையை சர்வதேச அரங்கில் உயர்த்திவைத்தவர்கள், இது பாரதத்தின் சிறப்புச் சாதனை.

இந்த மரபு, இந்தப் பரம்பரை அரச பரம்பரைஅல்ல, மக்களால், ஆன்மிக உறுதி பெற்ற மக்களால் வளர்க்கப்படும் பரம்பரை.

இன்று இதற்கு உரித்தானவர் வரலாறு காணாத சாதனைக்குரியவரான புதிய பிரதமர் ரஜீவ் காந்தி கடந்த வருடத்தில் நிகழ்ந்த பெரிய சிறிய அரசியல் தவறுகளை நன்குணர்ந்து, திறந்த மனதுடன், விருப்பு வெறுப்பற்ற விஞ்ஞான ரீதியில், அதே சமயம் அன்னையாரின் அபாரமான தீர்க்க தரிசனத்துடனும், செயலாற்றும் திறனுடனும் ஆட்சியைத் தொடர்வாரென நம்ப இடமுண்டு.

ஆந்திரா தேசத்தில் ஜனநாயகம் சறுக்கியதையும், பஞ்சாப்பில் உண்டான படுகுழியின் மீதத்தையும் ஏனைய மாநிலங்களில் உள்ள வலைவு நெளிவுகளையும் சிறுபான்மையினரின் குறைகளையும் மந்திரத்தால் மாற்றிவிட முடியாது

எடுத்தஎடுப்பில்இவற்றை ஆராய்ந்து பரிகாரம் தேடுவேனென்று சொல்லியிருக்கிறார். வெளிநாடுகளுடன் குறிப்பாக இலங்கை போன்ற அண்டை நாடுகளுடன் கடந்த ஆட்சியின் சிநேகக் கொள்கையை தொடர்ந்து கடைப்பிடிக்கச் சங்கற்பம் செய்திருக்கும் புதியஇந்தியப் பிரதமருக்கு எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984-ம்ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49. Telegram Tele phone number 22389-24126.

## இந்திய லோகசபை கட்சிகளின் நிலை

இந்திய லோகசபைத் தேர்தலில் போட்டியிட்ட முக்கிய அரசியல்கட்சிகள் பெற்றுள்ள இடங்களின் விபரம் வருமாறு:

(நேற்று இரவு வரை வெளியான முடிவுகள்)

| | | |
|---|---|---|
| ✶ மொத்த இடங்கள் | – | 515 |
| வெளிவந்தவை | – | 503 |
| இந்திரா காங்கிரஸ் | – | 396 |
| ஜனதா | – | 10 |
| பாரதீய ஜனதா | – | 02 |
| காங்கிரஸ்-எஸ் | – | 04 |
| தெலுங்கு தேசம் | – | 28 |
| மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் | – | 22 |
| சுயேச்சைகள் | – | 07 |
| இந்திய கம்யூனிஸ்ட் | – | 06 |
| அண்ணா தி மு. க. | – | 12 |
| தி. மு. க. | – | 01 |
| தலித் மஸ்தூர் கிஸான் | – | 03 |
| காங்கிரஸ் (ஜே) | – | 01 |
| ஏனையகட்சிகள் | – | 11 |

### குடியிருப்பாளர் தகவல் அறியும் பத்திரம்

## கடையொன்றில் கிலோ கணக்கில் விற்பனை!

### விசாரணை நடைபெறுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை குடியிருப்பாளர் தகவல்களை அறிவதற்காக தயாரிக்கப்பட்ட பத்திரங்கள், யாழ்நகரிலுள்ள கடையொன்றில் கிலோ கணக்கில் விற்பனை செய்யப்பட்டது தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது.

இத்தகவல் பத்திரங்கள், கடையொன்றில் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக யாழ். ஆணையாளர் திரு. சி. வீ. கே, சிவஞானத்திற்கு புகார் செய்யப்பட்டதுடன், விற்பனை செய்யப்பட்ட அப்பத்திரம் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இப்பத்திரங்கள், குடியிருப்பாளர் தகவல் அறிவதற்காக சபை உத்தியோகத்தர்களிடம் பிரித்துக் கொடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் பற்றி விசாரணை நடத்தி வரும் குழுவினர் அப்பத்திரங்களை வாங்கிய கடைக்காரரையும் சந்திக்கவுள்ளனர். (க)

### தீவிரவாதிகள்...

(1ம்பக்க 5ம் கலத்தொடர்ச்சி)

ஈழம் புரட்சிகர மாணவர் இயக்கம் இம்மாதிரி பயிற்சி நடத்திவருவதாகப் பொலிசார் கருதுகின்றனர்.

## ரயில் பிரயாணிகள் ஏமாற்றம்

[யாழ்ப்பாணம்]

கொழும்பு செல்வதற்காக நேற்று நண்பகல் யாழ். ரயில் நிலையத்திற்கு வந்த பிரயாணிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

முன்கூட்டியே டிக்கட்பதிவு செய்து கொண்டவர்கள், நண்பகல் யாழ். ரயில் நிலையம் வந்த போது கிளிநொச்சி வரையே ரயில் சேவை என்று அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. இதனால் அவர்கள் தனியார் வாகனங்களில் கிளிநொச்சி சென்றனர். (க)

### இந்திய...

(1ம் பக்க ம் கலத்தொடர்ச்சி)

அவதானிகள் கருதுகின்றனர்.

புதிய முகங்களுக்கு அமைச்சரவையில் இடமளிப்பதில் இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தி அக்கறை செலுத்தி வருவதாகவும் கூறப்பட்டது.

### மன்னார்...

(1ம்பக்க 2ம்கலத்தொடர்ச்சி)

திரசோதி 'வெண்ணிலா' பழம் றோட்டு உரும்பராய்.

சுன்னாகம்: திரு. எஸ். கே கணேசன் 'கணேசன் ரெக்ஸ் ரைல்ஸ்' சுன்னாகம்.

அரியாலை: டாக்டர் எஸ். சுந்தரலிங்கம், 439, ஸ்ரான்லி வீதி, அரியாலை யாழ்ப்பாணம்.

நெல்லியடி, பருத்தித்துறை, கரவெட்டி, புலோலி, வல்வெட்டித்துறை: திரு. வி. சிவானந்தன் [நாகராசா] சேர்ச் ஒழுங்கை புலோலி தெற்கு.

நல்லூர்: திரு. இ. இராஜலிங்கம், 50, ஹைஸ்கூல் வீதி யாழ்ப்பாணம்.

## 4 பேர் பலி

புதுடில்லி, டிச.30

இந்திய பொதுத் தேர்தலையடுத்து இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்களில் 4 பேர் பலியானதாகவும், 20பேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

### முல்லைத்தீவு..

(1ம் பக்க 5ம் கலத் தொடர்ச்சி)

துள்ளார்.

மேற்படி அகதிகளாக உள்ள இம்மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பாக இ. தொ. கா. பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு கவலை தெரிவித்ததைத் தொடர்ந்தே இவ் ஏற்பாடு நடைபெறவுள்ளதாகத் தெரியவருகிறது (சாவகச்சேரி நிரு.)

### புதுவருடத்தில்...

[1ம் பக்க 5ம் கலத்தொடர்ச்சி)

யப்படுவார்களென்று தாம் மனப்பூர்வமாக நம்புவதாக பொலிஸ் மா அதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

இவர்களை விடுதலை செய்யுமாறு அமைச்சர் தொண்டமானும் கோரிக்கை விடுத்துளளார்.

### கான்ஸ்டபிள்...

(1-ம் பக்க5ம்கலத்தொடர்ச்சி)

தான் யாழ்ப்பாணம் பொலிஸ் பகுதிக்கு மாற்றலாகி வந்தவராம்.

பருத்தித்துறையில் தமது வீட்டில் இருந்து எங்கோ சென்று கொண்டிருக்கையில் இவர் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

இவரது தம்பியும் இவ்வாறே கடத்திச்செல்லப்பட்டு ஒரு நாளில் இருவரும் கொல்லப்பட்டுள்ளார்கள் என்று தெரியவருகிறது.

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து மகேசன்

(ஓய்வு பெற்ற இலிகிதர் இ. மி. ச.)

நீராவியடியை பிறப்பிடமாக கொண்டவரும் காலஞ்சென்ற றெஜிஸ்ரார் சரவணமுத்து இராசம்மா ஆகியோரின் மகனும் காலஞ்சென்ற கௌரி அம்பாளின் அன்புக்கணவரும், மனோரஞ்சினி, மனோகரன் [இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்], மகேந்திரராஜா (All Ceylon distributors), ஜெயபாலன் [Saudi) ஜெயலோசனி, சிறிதரன் [ஆசிரியர் புங்குடுதீவு], சிறிதஷ்சனி, கஜேந்திரன் (ஆசிரியர் வவுனியா) ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற மயில்வாகனம், நித்தியானந்தன் (Singapore), கைலேஸ்வரி, தவமலர், கமலாம்பாள், ஜெயராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், ரவிசங்கர், பிரஜானந்தன், பிறேமானந்தன், பிரதீபன், தருபிதன், பிரஷாந்தி, கஜன், ஜனார்த்தனன், மயூரன், பிரஷானந்தன், அஜந்தன், லக்ஷ்சி, யாழினி, பிரசன்னா, பிரபாலினி ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 31 - 12 - 84 இன்று திங்கட்கிழமை பகல் 12 மணியளவில் வளாகலேன் திருநெல்வேலியில் நடைபெறும்.

— பிள்ளைகள் 1168

## மரண அறிவித்தல்

### திருமதி சிவானந்தசோதி (துரைமணி) மாணிக்கவாசகர்

நல்லூர், செட்டித்தெரு ஒழுங்கை இல 29யைச் சேர்ந்த திருமதி சிவானந்தசோதி (துரைமணி) மாணிக்கவாசகர் 30-12-84 காலை இறைவனடி சேர்ந்தார். அன்னார் இளைப்பாறிய உப அதிபர் மாணிக்கவாசகரின் அன்பு மனைவியும், திருமதி ருக்குமணிதேவி சண்முகநாதன், செந்தில்நாதன் (யாழ் ஐக்கியவியாபாரச் சங்க சாவகச்சேரிக் கிளை), ஆனந்தகோபால் (ஆசிரியர், Nigeria Sokieto state), நடேசநாதன் (யாழ். பல்கலைக்கழக பாதுகாவலர்), பரிபூரணானந்தன் (U. K), திருமதி சத்தியபாமா அச்சுதன் (U. K) கிருபானந்தன் (Engineer, U. K), ஸ்ரீகாந்தா (U. K) ஆகியோரின் அன்புத் தயாரும், பொ. சண்முகநாதன் (ஆசிரியர், கொழும்புத்துறை இந்துமகாவித்தியாலயம்), திருமதி இராஜேஸ்வரி, திருமதி சவுந்தலாதேவி (ஆசிரியை Nigeria), திருமதி கமலேஸ்வரி, திருமதி விமலாதேவி (U. K), திரு. த. அச்சுதன் (U. K), திருமதி ஜெயம் (U. K)ஆகியோரின் மாமியாருமாவார்.

ஈமக்கிரிகை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பொ. மாணிக்கவாசகர் (கணவன்)
29, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்,
30-12-1984. (1167)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org